தனிப்பிரதி விலை {உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா}

KUDI ARASU.

Reg. No. M. 2041

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா ... | ... | ரூ 3—0 |
| அரை சந்தா | ... | ரூ 1–12 |
| வெளிநாட்டுக்கு | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு விபவ ஞு சித்திரை மீ 2உ. (14—4—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 51.

வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

## "பகுத்தறிவு."

சுக்கில வருஷம் சித்திரை மாதம் முதல்கொண்டு "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குப்பகுத்தறிவைவளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விடமனிதனுக்குப்பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும் அதை அனுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும். அன்றியும் தமிழ் நாட்டில்உள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துச்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள்.

விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

புத்தகம் 1-க்கு



## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும்கிடைக்கும்

வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. 2—0—0

(4-a)

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சுயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, ... பஜார், மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
(9) வெட்னரி தோட்டம், சேலம்.

## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டைசராட்டுபொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கூர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாசஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர்படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி
(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.

## ஆவேசச் சாமிகள்.

(எஸ். முனிசாமி.)

நம் தாய் நாடெங்கணும் சிவன், விஷ்ணு, அம்மன், பிடாரி ஆலயங்களை கணக்கின்றி இருப்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தலங்களில் சில பூசாரிகளின் ஆவேசமான பாடல்களினால் சிலர் மதிமயங்கிவிடுகின்றார்கள். இப்பூசாரிகள் கத்தி, சூலம், ஜாட்டி முதலிய ஆயுதங்களைத் தாங்கி ஆ! ஊ! என்று கத்தி மனிதர்களைப் பயமுறுத்துகின்றனர். ஒரு சில மக்கள் அப்படிப்பட்ட ஆவேசங்களைக் கடவுளோ அல்லது சில்லலறைத் தேவதைகளோ என்று மயக்கமுற்று பூரணநம்பிக்கையுடன் நலம்பெறக் கருதுகின்றனர். நம்மக்களின் புன்மதி இருந்தவாறென்னே! "கசடறக்கற்ற புத்திமான்கள்" என்பவர்களும் மூட பக்தியாலோ, மூடப் பழக்கவழக்கங்களில் ஆழ்ந்திருப்பதினாலோ கல்வியறிவற்ற பெண்களின் தொந்திரவு பொறுக்கமாட்டாமையாலோ தொலை தூரத்திலிருந்து மெய்வருத்தத்தையும் பணச்செலவையும் கவனியாது கட்டுச்சாதம், மூட்டை, முடிச்சுகளுடன் வந்து தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லியும் அல்லது கேட்டுக் கொண்டும், வாயில் வந்தபடி பிதற்றும் ஆவேசங்களின் பேச்சுக்களை தேவவாக்கெனக் கொண்டு பல உயிர்களைப்பலி கொடுத்தும் மற்றும் கோரமான சில செயல்களைச் செய்தும் வருகின்றனர். அதனால் குறைகளும் தீருகின்றனவாம். என்னே இவர்களின் மூடமதி! கடவுளே ஆவேசித்து வாக்குக் கொடுக்கிறது என்றால் எல்லா உயிர்களையும் அன்பாய் படைத்த கடவுள் ஆடு, மாடு, கோழிகள் இன்னும் அநேக வாயில்லா ஜீவன்களை எனக்காக என்னெதிரில் பலி இடுங்கள் என்று சொல்லுமா? என்று பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பாருங்கள். மனிதர்களும் அம்மூட ஆவேசப் பிதற்றுதலுக்கு உட்பட்டு பலி கொடுத்தால் எல்லா நூல்களுக்கும் மேலான நூலெனக் கருதப்படும் திருக்குறள் என்னும் தருமநூலில் கூறப்பட்ட "கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்" என்பதற்கு மாறுபட்டன்றோ நடக்கவேண்டிவருகிறது, மற்றும் இந்த ஆவேசங்கள் மனிதனைப்பயமுறுத்துவதும், இவ்வின்ன காணிக்கைகள் தான் கோயிலுக்குச் செலுத்தவேண்டும் என்றவற்புறுத்துவதும் இன்ன உயிர்களைப் பலியிடாததினால்தான் இன்னின்ன விபத்துகள் நேர்ந்தனவென்று சொல்லுவதும் விடாமைக[illegible]ப்படுகின்றது. மற்றும் கடவுளுக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள குணங்களுக்கும் மாறுபட்டன்றோ இருக்கிறது இச்செய்கை? இவ்வாறு ஆவேசங்கள் சொற்பிரகாரம் தான் மனிதர்கள் நடக்கவேண்டுமென்றால் திருக்குறல் நீதி என்னவாவது?

கடவுளுக்காகப் பலியிடுபவர்களை மாக்கள் என்று சொல்லாமல் பகுத்தறிவுள்ள மக்கள் என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? இவ்வித நிகழ்ச்சிகள் வேதசாஸ்திரப் புராணப்புரட்டுகள் ஏற்பட்ட காலத்திலிருந்து ஏற்பட்டன என்று ஊகிக்கப் பலவித ஆதாரங்கள் இருக்கின்றன. இந்த ஆவேசவழக்கத்தைச் சிலர் தாங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாகவே கொண்டிருக்கின்றனர். இந்த ஆவேச நம்பிக்கையால் மனிதனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட பகுத்தறிவைக் கெடுத்துக்கொள்ள ஏதுவாகின்றதேயன்றி வேறில்லை.

## பொங்கலூர் பாடசாலை க்ஷேம நிதிச் சீட்டு,

பொங்கலூர் கம்ம தலப்பிரமுகர்களான திருவாளர்கள். பெரிய முத்து நாயுடு, நா. வேங்கடசாமி நாயுடு ஆகிய இருவர்களின் பெருமுயற்சியால் பொங்கலூரில் பத்தாயிரம் ரூபாச் செலவில் ஒரு பாடசாலைக் கட்டடமும் ஐயாயிரம் ரூபாச்செலவில் ஆசிரியர்கட்கு இலவச விடுதிகள் ஆறும், முடிக்கப்பெற்று 1920-ம் வருடம் பிப்ரவரி மாதம் 5 ந் தேதி முதல் பாடசாலை சரிவர நடந்து வருகிறது. அயலூர் மாணவர்களுக்குப் பாடசாலை கம்பவுண்டில் ஒரு ஹாஸ்டலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பாடசாலையானது ஜில்லா பிரமுகர்கள் அடங்கிய ஒரு கமிட்டியால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டியை ரிஜிஸ்டர் செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்பாடசாலையின் விசேஷ அபிவிருத்திக்காகப் பொருள் வேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டி மூலம் பொங்கலூர் பாடசாலை க்ஷேமநிதிச்சீட்டு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. கமிட்டி பிரசிடெண்டு திருவாளர் ராவ் பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரவர்கள் பி, ஏ. பி. எல். கோயமுத்தூர், வைஸ் பிரசிடெண்டுகள் திரு. ராவ்பகதூர் சி, எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் எம். எல். சி. ஜில்லா போர்டு பிரசிடெண்டு அண்டு முனிசிபல் சேர்மன் கோயமுத்தூர், திரு. ராவ்பகதூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள், பட்டக்கார், ஈரோடு தாலூகா போர்டு பிரசிடெண்டு பழைய கோட்டை, திரு. வி. சி, வெள்ளியங்கிரிக்கவுண்டரவர்கள் மிராசுதார் வெள்ளகிணர். இந்த ஜில்லாவில் பொறுப்பு வாய்ந்த கனவான்கள் பலர் பொக்கிஷதாரர்களாகவும் காரியதரிசிகளாகவும் அங்கத்தினர்களாகவும் சேர்ந்திருக்கின்றனர்.

சீட்டின் விபரம்,

டிக்கட்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 22 டிக்கட்டுகள் அடங்கியது ஒரு புஸ்தகம் 4550 புஸ்தகங்கள் போட்டு ரூ 100100 வசூல் செய்யவேண்டியது. அதில் கமிஷன் அச்சுக்கூலி சிப்பந்தி சம்பளம் இன்னும் மற்ற இதர செலவுகளுக்காக ரூ 14100 போக மீதி ரூ, 86000-ல் பாடசாலை நிதிக்கு ரூ, 43000 வைத்துக்கொண்டு மீதி ரூ. 43000-தை சீட்டுப்போட்டு ஜனங்களுக்கு பின் வருமாறு பிரித்துக்கொடுக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1-வது பிரைஸ் | | 1 | 6000 | 6000 |
| 2 | ,, | 1 | 3000 | 3000 |
| 3 | ,, | 1 | 2500 | 2500 |
| 4 | ,, | 1 | 2000 | 2000 |
| 5 | ,, | 1 | 1000 | 1000 |
| 6 | ,, | 2 | 500 | 1000 |
| 7 | ,, | 4 | 250 | 1000 |
| 8 | ,, | 5 | 200 | 1000 |
| 9 | ,, | 10 | 100 | 1000 |
| 10 | ,, | 20 | 50 | 1000 |
| 11 | ,, | 30 | 25 | 750 |
| 12 | ,, | 40 | 20 | 800 |
| 13 | ,, | 200 | 10 | 2000 |
| 14 | ,, | 3990 | 5 | 19950 |
| | | 4306 | | 43000 |

ஒரு டிக்கட்டின் விலை ரூ. 1—0—0 ஆக 22 டிக்கட்டுகளடங்கிய ஒரு புஸ்தகம் விற்றவர்கள் ரூ. 20-சபைக்கு அனுப்பி விட்டு 2 ரூ. கமிஷன் எடுத்துக்கொள்ளலாம். குறைந்து விற்கிறவர்களுக்குகமிஷன் கிடையாது.

சீட்டு 1929 வருஷம் ஆகஸ்டு மாதம் 11 ம் தேதியன்று கமிட்டி மெம்பர்கள் பொது ஜனங்கள் முன்னிலையில் பொங்கலூர் பாடசாலையில் எடுப்பார்கள். சீட்டு எடுக்கும் காலம் முன்னடியே 'குடி அரசு' 'திராவிடன்' 'இந்து' பேபர்களின் வாயிலாக வெளியிடப்படும். இதில் கண்டபடி பூராத் தொகையும் வசூலானால் மேற்கண்டபடி பிரைஸ் கொடுக்கப்படும். வசூல் குறைச்சலாக இருந்தால் பிரைசும் சீட்டும் விழுந்தவர்களுக்கு விதாசாரப்படி குறைச்சலாகத்தான் கொடுக்கப்படும். ஜூலை மாதம் 15 தேதிக்குள் கண்டிப்பாய் தொகைகளும் டிக்கட்டுகளும் ஆபீசுக்கு வந்துவிடவேண்டும் என்று திருவாளர் காவேட்டி நாயுடு அறிவிக்கிறார்.


## இங்கிலீஷ்

### பேசவும், வாசிக்கவும், எழுதவும் தெரியுமா?

1000-கணக்கான மாணவர்கள், குமாஸ்தாக்கள், வியாபாரிகள், ஆபீஸ்-சிப்பந்திகள் திருப்தியடைந்த உலகப்பிரசித்திபெற்ற,

ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்.

தபால் மூலம் 30 நாளைக்குள் கற்றுக்கொண்டு சர்க்காரால் அங்கிகரிக்கப்பட்ட ஜூனியர், சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது வக்கீல், இஞ்சினீயர், டாக்டர் வேலைகளுக்குப் படிக்கலாம். ரூபா 5-க்கு முழு ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸைப் பெற்றுக்கொள்ளலாம். வி பி. சார்ஜ் வேறு. ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள். முந்துங்கள்!

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்.

நாசரேத். (தென் இந்தியா)

# அவியல்.

## 16-ம் பாகம்.

### கைவல்யம் எழுதுவது.

அவியல் என்னும் வியாசத்தின் தொடர்ச்சியைப்படிக்க நமது வாசகர்கள் ஆசையோடிருப்பார்களென்று நினைத்துக் கொண்டுதானிருக்கிறேன். அவியல் என்னும் வியாசம் ஒரே விஷயமாய்த் தொடர்ச்சியாய் இருக்காது. என்றாலும் பலவித காய்கிழங்கு வகைகளால் கலந்துண்டாக்கப்பட்ட அவியல் என்னும் பதார்த்தம் சுவையையும் பலத்தையும் எப்படி அளிக்கக் கூடியதாகவிருக்கிறதோ அப்படியே அவியல் என்னும் பேரோடு கூடிய வியாசம் நியாயத்தையும் அவசியத்தையும் உடையதாக விருக்கிறது.'

சந்திரன்-என்னருமை!வசந்தா! உன்னைக்கண்டு பலநாட்களாயின, அதற்கு மத்தியில் நமது நாட்டில் உண்டான விவகாரங்களோ அனந்தம். அதில் சுயமரியாதைக்காரர்கள் செங்கற்பட்டில் ஒன்று கூடிச் செய்த தீர்மானங்களைப்பற்றி பலர் பலவாறாகப் பேசுகிறார்கள், சமயவாதிகள் கோபிக்கிறார்கள். அவற்றைக் கருவறுப்பதாகப் பார்ப்பனர்களுக்குத் தைரியமும் சொல்லுகிறார்கள். வேதாந்தியும் சித்தாந்தியும் போட்ட சண்டையில் மொத்தியும் மோதியும் தூற்றியும் தங்கள் தங்கள் ஏடுகளையெல்லாம் தட்டிக்கொட்டித் தரை மட்டமாக்கிச் சோர்ந்து களைத்துசோற்றுக்கில்லாமல் உலகப் பொது அறிவையும் கெடுத்து செத்துப்போனபண்டிதர்களும் அவர்கள் எழுதின ஏடுகளும் போகட்டும், இப்பொழுது கலியாணசுந்தர முதலியாரும் இன்னும் சிலரும் வேதாந்தியாம் வடிவேல் செட்டியாரை தலைவராகக் கொண்டு ஆஸ்திக சபை கூடினார்கள். எது எப்படி இருந்தாலும் கடவுள் இல்லை என்றும் கோவிலை இடிக்க வேண்டுமென்றும் செங்கற்பட்டு மகாநாட்டில் தீர்மானம் பண்ணலாமா?...

வசந்தன்-என்னருமை நட்பே! செங்கற்பட்டு மகாநாடு அவ்வித தீர்மானம் செய்யவில்லை. செங்கற்பட்டு தீர்மானங்கள் அப்பொழுதே பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. பத்திரிகைகளில் அவ்வித தீர்மானம் செய்தோம் என்று சுயமரியாதை சங்கத்தவர்கள் சொல்லுவதுமில்லை. அவ்வித தீர்மானம் செய்யவில்லை என்று சுயமரியாதைத் தொண்டர்களும் அநேகஇடத்தில் சொல்லிஇருக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்களும் பொதுஜனங்களும் இன்னும் பலருமான அநேகர் வந்து நிறைந்த செங்கற்பட்டு மகாநாட்டில் தீர்மானம் பண்ணாத விஷயத்தை தீர்மானம் பண்ணினதாக திருமங்கலம் ஜீவகாருண்ய மகாநாட்டில் தலைமை வகித்தவரும், சைவரென்று சொல்லிக் கொள்ளுபவரும் கன்னியாகுமரியிலிருந்து திருவேங்கட மலைவரையிலும் வாதம் செய்வதற்கு ஆசிரியர்களைக் கூப்பிடுபவருமான திரு. கலியாண சுந்தர முதலியார் முன்னிலையில் ரா. குமாரசாமி பிள்ளை என்னும் சைவர் சுயமரியாதைக்காரர்கள் கோவிலை இடிக்கவும் கடவுள் இல்லை என்றும் தீர்மானம்பண்ணி நாட்டைக் கெடுக்கிறார்கள் என்று பேசினதாகவும் அதை அனுசரித்து திரு. முதலியார் பேசினதாகவும் மாசி மாதம் 19ந் தேதி "சுதேசமித்திரனில்" நானும் படித்தேன். இந்த விதப் பெரும் பொய்யை எந்தச் சமயமும் ஏற்றுக்கொள்ளாது. சுயமரியாதைக்காரர்களை சனசமூகம் வெறுப்பதற்கு சமயத்தை விற்றுப்பிழைக்கும் பழக்கமே ஒழிய வேறென்ன? சமயத்தில் சத்தியமிருப்பது உண்மையானால் இப்பெரும் பொய் வார்த்தைகளைச் சொல்லுகிறவர்கள் சமயப் பேர் சொல்லி சபைகளுக்கு வந்து பிரசங்கம் செய்வதால் சமயத்தில் உண்மை ஏதாவது மிஞ்சியிருந்தால் அதுவும் பாழ்பட்டுப் போகும். தெய்வ விரோதமான இப்பெரும் பொய்யைச் சொல்லி சமயத்தின் தருமங்களை உறுதியாகத் தாங்கும் வேர்க் கொள்கைகளை இவர்கள் கோடரியால் வெட்டுகிறார்கள். பண்டிதர்கள் நமது சரித்திரத்தின் ஒரு பகுதிக்கு ஒளிப்பக்கத்தையும் மற்றொரு பகுதிக்கு இருட்பக்கத்தையும் திருப்புகையிலே அஸம்பாவிதம் ஜனிக்கிறது. ஆனால் அவர்கள் நமது குணத்தில் ஓரம்சம் மற்றோர் அம்சத்தை வஞ்சிக்க விடுதல் எக்காலத்தும் இயலாது என்பதை சுயமரியாதைக் காரர்களால் உணர்வார்கள்.

சந்திரன்-எனது அன்பான தோழா! சுயமரியாதைக்காரர்கள் கடுமையாகப் பேசுகிறார்கள். அவர்களது தலைவருக்குப் படிப்பில்லையென்று திரு. கலியாண சுந்தரமுதலியாரும் அவரோடு சேர்ந்த சைவர்களிற் சிலரும் சொல்லுகிறார்கள். படிப்பிருந்தால் சமயத்தையும் சமயப்பெரியார்களையும் குற்றம் சொல்லுவார்களா? கடவுள் இல்லை என்றும் சமயத்தை அழித்து விட வேண்டுமென்றும் சொல்லுவார்களா? இதனால் நாஸ்திகம் பரவி நாட்டைக் கெடுத்து விடாதோ? அதனால் ஆஸ்திகத்தைப் பரப்பி எல்லாரையும் ஆஸ்திகளாக்க ஆஸ்திக சங்கம் அவசியம் தானே.

வசந்தன்—என் னுயிரின் உள்ளமே! படிப்பென்றாலும் கல்வியென்றாலும் அறிவதும் தெரிவதும் தானே. அறிந்தும் தெரிந்தும் கொண்டவனுக்குக் கல்வியும் படிப்பும் வருஷம் ஒரு கிளாஸ் பாசான சர்ட்டிபிக்கேட்டும் எதற்கு? காதுகுத்தாமல் கலியாணம் செய்தால் அந்த ஆணும்பெண்ணும் வாழ்க்கைக்கு வசப்படாதோ? பிள்ளையாருக்கு முன் ஏடு தூக்காமல் எண்சுவடி படித்தவர்கள் போடும் கையிருப்புக் கணக்குத்தானே இப்பொழுது எல்லாக் கச்சேரடமும் செய்கிறது. கணக்கு கண்டுபிடிக்க சீமைக்கு அனுப்பப்பட்ட கனம் ராமன் சீமை உயர் கலாசாலைக்குப் போனவுடனே அவருக்கு கலாசாலையிலுள்ள எல்லாக்கணக்குப் பட்டமும்கொடுத்தார்கள். இவர் எந்த கலாசாலையிலும் பி.ஏ. பட்டம் பெற்றவரல்லவே. அவர் போட்டுப்போன கணக்கின் அடிச்சுவற்றைப்பின்பற்றி எல்லாக்கணக்குப் புஸ்தகங்களும் ஓடுகின்றனவாமே. பள்ளிக்கூடம் பார்த்தறியாத ராமகிருஷ்ணபரமஹம்சர்பாதம்தாங்கின பக்தர்கள் பாடிப்போன பாட்டைத்தானே நீயும் நானும் நம்நாட்டுப் பண்டிதனுமல்லாமல் வருணாஸ்ரமமகாநாட்டுத் தலைவர் டி.ஆர். ராமச்சந்திர அய்யரும் பாடுகிறார். ராமாயணம் பாடுவதற்குமுன் வால்மீகி நன்னூல் படித்து தொல்காப்பிய பாடம் கேட்டதாக எந்த காவியத்திலாவது நீ படித்ததுண்டா? காளிதாசன் எந்தப்பள்ளியில் படித்துப்பண்டிதனானான். பண்டிதன் தண்டிக்கு உட்கார்ந்துபடித்தஇடம் காய்ப்புகாய்த்துப்போயிற்றேயொழிய காளிதாசனுக்கு முன்னால்கவியென்கிறபெயர் வரவில்லையே. கம்பனைக்கூடத் தமிழ்பண்டிதன் படித்ததாக ஒத்துக் கொள்ளுவதில்லையே. ஒத்துக்கொண்டால் சரஸ்வதிசொன்னான் கம்பன்எழுதினான் என்று என்கவியின் விசேடம் கண்டவிடத்திலெல்லாம் சொல்லுகிறார்கள். திருஞானசம்பந்தர் ஞானப்பாலால் பாடினதாகச் சொல்லப்படுகிறதேயொழிய அவர்படிப்பால்பாடினதாகச் சொல்லப்படுவதில்லை. சங்கரரும் சங்கரர் அவதாரத்தால் 12-வயதில் சன்னியாசம் பெற்றதாகச் சொல்லப்படுகின்றதேயொழிய யோகக்கிரமத்தின் வழியாய்ச் சந்நியாசம் பெற்றதாகச் சொல்லப்படுவதில்லை. கல்வியின்திறமை அறிவிற்குள் அடங்கிப்போகையில்சுயமரியாதைத் தலைவர் நன்னூலும் நைடதமும் ஏன்பாடம் பண்ணவேண்டும்?

ஆயுதத்தால் வைத்தியம்செய்து அநேகருக்குக் குணப்படுத்தி வைத்தியனுக்குவேண்டிய குணத்தையுடைய கனம் டாக்டர் ரெங்காச்சாரிக்கு அகஸ்தியர் ஐந்நூறிலோ ரோமரிஷி எழாயிரத்திலோ எத்தனைபாட்டுத்தெரியும்? மருந்தால் வியாதியை குணப்படுத்தும் டாக்டர் குருசாமிமுதலியாருக்கு நாடி நாலாயிரம்பாட்டில் நாலுபாட்டாவது தெரியுமா? குழந்தைகளநோயைக் குணப்படுத்தும் குட்டீன் டாக்ட்டர் கோவிந்தராஜுலு பிள்ளைக்கு எந்தவாகடம் தெரியும்? ஆஸ்திகர்களுக்கெல்லாம் ஆஸ்திகராய் ஆதிநாராயணமூர்த்திக்கு அந்தப்புரக் காரியஸ்தனாய் எல்லா ஆஸ்திகர்களுக்கும் வரும் இடுக்கண்களைத்தீர்ப்பதற்கு அவரவர்கள் இயல்புக்குமேல் 2 பங்குபொருள் வாங்கிக்கொண்டுபெருமாளுக்கு குறைகளை எடுத்துச்சொல்லி அவரைச் சமாதானப்படுத்தி சந்தோஷிக்கச்செய்து வைக்கும் ஸ்ரீ திருப்பதி மகந்துக்கு வந்த வினையைத் தீர்த்து இனி வினை வராமலிருப்பதற்கு வழி கண்டு பிடித்துக்கொண்டு சனசமூகம் நலம் பெறுவதற்காகப் பெருமாளுக்குக் கொடுத்த காணிக்கைப்பணத்தை கைநிறைய வாங்கிக்கொண்டிருக்கும் கர்னல் மல்காம்சன் எந்தப் பல்லாண்டு படித்தார்?

ஸ்ரீராமலிங்க சுவாமிகள் பாட்டு அருட்பாட்டல்ல மருட்பாட்டென்று ஆறுமுக நாவலர் காலந்தொட்டு சைவர்களில் பலர் ஆட்சேபித்து கதிர்வேற்பிள்ளை காலம்வரையிலும் தர்க்கம் பண்ணி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் பாட்டைத் தூற்றினார்கள். திரு கலியாணசுந்தர முதலியாரும் கதிர்வேல் பிள்ளை கூடப் போனவராம். இப்பொழுது கலியாணசுந்தர முதலியார், ராமலிங்க சுவாமிகளைப்போல அருள்பெற்றவர்களும் அவர் பாட்டைப்போல அருள்பெற்ற பாட்டுகளுமில்லை என்று எத்தனையோ தரம் சொல்லி விட்டார். திருநெல்வேலி சைவப் பெரியவர்கள் சபையிலும் ராமலிங்க சுவாமிகள் அவதாரம் செய்து சைவத்தைச்சீர்திருத்தினவர்களில் ஒருவர் என்று சொன்னார்கள். அதை இப்பொழுதுதான் சொல்லுகிறார்கள். அதுபோல இனியும் சிறிதுகாலம் போனால் சமயத்தைச் சீர்திருத்த அவதாரம் செய்த பெரியார் ராமசாமியார் என்று நம் நாடு சொல்லத்தான் போகிறது.

கடவுள் உண்டா இல்லையாவென்று சுயமரியாதைக்காரர்கள் தர்க்கம் செய்ய வந்தவர்களல்லவென்பது அநேக தரம் சொல்லியாய்விட்டது. கடவுள் எதற்காகவென்று கேட்பவர்களுண்டு. கடவுளுக்கு இதுவரையிலும் செலவு செய்ததினால் சனசமூகம் அடைந்த நன்மை என்னவென்றும், அதனால் கடவுளுக்கு எவ்வளவு தூரம் திருப்தி ஏற்பட்டிருக்கிறதென்றும், கடவுளுக்கு நாம் செய்யும் கைங்கரியம் சரியான வழியாகவிருந்தால் நம் நாடு பஞ்சத்திலும் அந்நிய அரசாட்சியிலிருப்பதற்கும் காரணமென்னவென்றும், எல்லாருக்கும் பொதுவென்று சொல்லப்படும் கடவுள் நம் தேசத்தில் வித்தியாசப்பட்டு ஒருவருக்கொரு நீதியும் மற்றவருக்கு வேறு நீதியும் வகுத்துக்கொடுத்து கடவுள் பார்ப்பார ஜாதியாக விளங்குவதாக சைவத் திருமுறைகளில் பாடியிருப்பதேனென்றும், எல்லா தேசத்திலும் அறிவு பொதுவாயிருக்க நமது தேசத்தில் எந்த கடவுள் அறிவைத்தனிச்சொத்தாகத்தடுத்துவைத்ததென்றும், சமயப் பேரைச்சொல்லி மனித ஜாதியை அவமதித்து அப்புறமொதுக்க எந்தக் கடவுள் கற்பித்ததென்றும், குறிப்பிட்ட சமயம் அல்லது நிறம் அல்லது ஜாதியைச் சேராதவர்களை இகழ்ந்து கொடுமைப்படுத்த எந்தக்கடவுள் குறுக்கே நின்றதென்றும், வலிமையைக்கண்டஞ்சும்நமதுபலக்குறைவான கடவுள் நம்மிலும் பலம் குறைந்தவர்களைக்கொடுமைப்படுத்துவதற்கு ஏன் துணை நிற்கிறதென்றும், கடவுளுக்குக் கொடுத்த காணிக்கை கப்பமெல்லாம்குருக்கள் அர்ச்சகர்கள், ஆச்சாரி, பூசாரி எடுத்து தங்கள் போக போக்கியங்களை

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

—ஶ—

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(15-ம் கட்டுரைத் தொடர்ச்சி)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது)

தசரதன் மடிந்தவுடன் அச்செய்தியை கேகய மன்னனுக்கு அறிவுறுத்த வேண்டுவது இன்றியமையாத கடமையாக இருக்க வழி வழி ஆசானும் ஆன்றமைந்த அறிவுடை முதியோனுமாகிய வசிட்டன் அக்கடமையைச் செய்யாமல் பரதனை மட்டும் உண்மையைக்கூறாமல் அழைத்து வரச்செய்கின்றனன். தசரதன் மாய்ந்த செய்தியைப்பரதன் கேகயத்திலிருக்கும் போது தெரிவித்தால் எவ்வாறுவது பரதன் தானே பிறப்பால் நாட்டுக்குரிய மன்னவன் என்பதை அங்கே அறிந்து கொள்ளுவான், அதனால் தசரதனும் தானும் செய்த சூழ்ச்சி நிறைவேறாது போமெனவே வசிட்டன் அவ்வாறு செய்தனன். அதிலும் வசிட்டன் வெற்றி பெறுகிறான். உண்மையுணராத சிறுவனாகிய பரதன் மூத்தவனாகிய இராமனே பட்டத்துக்குரியவனாயிருக்க தன் தாய் கைகேசி அநியாயமாக அவனை நாடிழக்கச் செய்ததோடு நில்லாமல் காட்டுக்கும் அனுப்பி விட்டாளே என்று மனம் துடித்து உலகம் தன்னை இகழுமே அதிலும் முடியும் சூட்டிக் கொண்டால் மிகவும் அதிகமாக இகழுமே என உண்மையாகவே உணர்கிறான். அதனால் தகாத செயலைச் செய்த தன் தந்தையையும் தாயையும் இகழ்கிறான். தந்தை தப்பிதமான வழியில் நடந்தால் செம்மைப்படுத்த வேண்டியது மகனுடைய கடமை யெனவும் அவன் கூறுகிறான். அவ்வாறே பரதன் இராமனை அழைத்து வந்து தான் கருதுமாறு அரசாள உரிய மூத்தவனாகிய அவனையே அரசனாக்க முந்துகிறான்.

சூழ்ச்சியில் வல்லவனாகிய இராமன் இவ்வளவையும் எதிர்பார்த்தே முரட்டுத்தனமாக நாடு பெற வழியில் தசரதனுடைய சொல்லையும் தட்டி நாட்டைப்பெற்று நிலை பெற வழி காடேகுவதே எனப் போகின்றனன். தான் எண்ணியபடி பரதன் தன்னை அழைத்துப் போக வருவதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்து இலக்குவனிடம் பரதன் வருவது தன்னை அழைத்துப் போகவே எனக்கூறுகிறான். பின்னால் வருவதையெல்லாம் நன்றாக எண்ணித் துணியும் தன்மையாளனாகிய இராமன் பரதனை எவ்வாறு கைவசப்படுத்தி நாட்டைப் பெறுவதெனத் தான் முன்னால் ஆராய்ந்து வைத்த படியே நடக்கிறான்.

பரதனிடம் வாக்கு வாங்கிக் கொண்டு பின்னர் உண்மையை அவனுக்கும் பிறருக்கும் உரைக்க வேண்டுமென்பது இராமனுடைய சூழ்ச்சி. பரதன் வந்தவுடன் அவனை நோக்கி இராமன் "நீ ஏன் இங்கே வந்தாய்? உன்னைப் பிரிந்தால் தந்தை இறப்பாரே? உன்னைப் பிரிந்து அவர் இறந்து விட்டனரா? குடிகள் உன்னிடம் அன்பு குறைந்து நாட்டைப் பிடுங்கிக் கொண்டு கைகேசி என்னைக் காட்டுக்குப் போகச் சொன்னதற்காக உன்னை நாட்டிலிருந்து துரத்தி விட்டார்களா? அல்லது தந்தைக்குப் பணிவிடை செய்ய மனமில்லாமல் வந்து விட்டனையா? உன் தாய் கைகேசி தன் எண்ணப்படி காரியம் முடிந்து நலமாக இருக்கிறாளா?" என பரதனை மறு மொழி கூறுவதற்குக்கூட இடங் கொடுக்காமல் விடாது தொடர்ந்து பல வினாக்களை வினவி பரதனுடைய மனத்தை மிகவும் புண்படுத்தித் துடிக்கிறான். இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அவை வருமாறு:— பக்கங்கள் 362, 363 "குடிகள் பரதனைத் துரத்தியிருந்தால் பரதனுடன் சைனியமும் பரிவாரங்களும் சுமந்திரரும் மற்றவர்களும் எப்படி வந்திருக்க முடியும்? பரதனை விட்டுப்பிரிந்த துக்கத்தால் தசரதர் இறந்திருந்தால் அவன் கேகயத்துக்கு போன உடனேயே இறந்திருக்க வேண்டும். தன்னை விட்டுப் பிரிந்ததால் அவருக்கு மரணம் நேரிடுமென்று ராமனுக்குத் தெரியாதா என்பதைக் கவனிக்கவும்......பரதனைப்பற்றி இப்படி இராமன் சந்தேகப்படுவதும் அதை அவரிடத்திலேயே சொல்லுவதும் ஆச்சரியமே...... ......இங்கே இராமன் கைகேசியைப் பற்றிக் குறிப்பிட்டு அழுத்திச் சொல்லுவது கவனிக்கத் தக்கது."

இதனை ஆராயுமிடத்து பரதனுடைய மனதைச்சுட்டு கைகேசியின் செயலில் தன் பொறுப்பைக்காட்டி விரைவில் பரதனிடமிருந்து நாட்டைத்தர வாக்கு வாங்கவே இராமன் இவ்வாறு பேசியவன் என்பதைச் சிறுவரும் அறிவாரிரார். இல்லையென்றால் இராமன், பரதனோடு சுமந்திரனும் பெருஞ்சேனையும் வந்திருப்பதை அறிந்து கொண்டே அவனைக் குடிகள் நாட்டை விட்டுத் துரத்தி விட்டனரா என்று வினவுவானா? இது ஒன்றே இராமனை வஞ்சகனென்று நிலை நாட்டுவதற்குத் தகுந்த சான்றாகுமன்றோ? பின் பரதன் தந்தையிறந்தது கூறியது கேட்டுத் தண்ணீரிரைத்து வந்து தாய்மார்களும் சேனை முதல் யாவரும் வந்த பிற்பாடு மறுபடியும் பரதனை எதற்காக வந்தனை என வினவினன் இராமன். பரதனோ பட்டத்துக்கு மூத்தவனுதலால் உரிமையுடைய இராமனை அழைத்துப் போக வந்ததாகக் கூறுகிறான். இராமன் உன்னைப் போலும் உத்தமன் நாட்டிற்கு ஆசைப்பட்டு அண்ணனுக்குத் தீங்கு செய்வானா? இருந்தாலும் தந்தையின் கட்டளையின்றி எதையும் ஏற்றுக் கொள்ளேன்." என்று பேசி நாட்டைத்திரும்பத்தர வாக்களிக்கும் நிலைமைக்குக் கொண்டு வருகின்றனன். இதனால் பரதன் அரசாள இராமனுக்கு ஒரு நாளும் எண்ணமிருந்திருக்காது என்பது வெள்ளிடைமலையே யன்றோ? இன்னும் இதனால் பரதன் அரசாள்வனேல் இராமனுக்குத் தீங்கு செய்தவனாவனென பரதனுக்கு இராமன் எடுத்துக் கூறியவனுமாவான். பரதனும் இராமன் எதிர்பார்த்தபடியே உணர்ந்து "நீர்கொடுத்த அரசை நான் உமக்குத் திரும்பக்கொடுக்கிறேன். கைகேசியைச் சமாதானப்படுத்தி யிருக்கிறேன். அரசாளும் என்று வாக்களித்து வேண்டுகின்றனன். இதனையே இராமன் எதிர்பார்த்தது. இராமன் கைகேசியிடம் வாக்களித்து அரசைப் பரதனுக்குத் தந்ததை கைகேசியாலடைந்த பரதன் தனக்கு வந்த அரசாட்சியை திரும்ப இராமனுக்குத்தருவதாக வாக்களித்திருக்கின்றனன். இவ்வாற்றால் இராமன் அரசைத்தன்னதாக்கிக்கொண்டு திரும்பவும் "தந்தை கட்டளையை மீறுதல் கூடாதென்று பாசாங்கு பண்ணுகிறான். பரதன் தசரதனை இகழ்ந்து மறுபடியும் இராமனை வேண்டுகின்றனன். தாய்மார்களும் குடிகளும் அவ்வாறே இராமனை வேண்டிக்கொள்கிறார்கள்.

இவ்வாறு தனக்குமிருந்த பலத்தைத்தேடி அனைபோட்டுக்கொண்ட இராமன் இதன் பின்னரே தசரதன் கேகயமன்னனிடம் கைகேசிக்குப் பிறக்கும் மகனுக்கே நாடளிப்பதாக வாக்குறுதி செய்ததை மெல்லக்கூறுகின்றனன். இராமனுடைய வஞ்சகச்சூழ்ச்சிதானென்னை? இவ்வாறு கூறும்பொழுதே பரதனுக்குவேறு வகையான உணர்ச்சி வராமலிருக்கும்படி "பரதா! நீ நாட்டை ஆள், நான் காட்டையாள்கிறேன்; நீ மக்களை ஆள், நான் மிருகங்களை ஆள்கிறேன்; நீ குடை நிழலில் இரு, நான் மரநிழலில்இருக்கிறேன்" என்று அவன் மனம் உருகுமாறு பலபடவிரித்துரைக்கின்றான். இப்போதுதான் வஞ்சகனாகியவசிட்டன் இராமனை அரசேற்கவேண்டுகிறான். பரதனுக்கு இதையெல்லாம் பார்த்து எப்படியாவது இராமனை அப்போதே நாட்டுக்கழைத்துபோக வேண்டுமென்ற உணர்ச்சியுண்டாகிறது. இராமன்வந்தால் தான் எழுந்திருப்பதாகக் கூறிக்குடிசைவாசலில் அவன் படுக்கிறான். இராமன் அதற்காகப்பரதனைக்கண்டிக்கிறான், பரதனுக்கு அதனால் உணர்ச்சி மிதமிஞ்சியெழக் குடிகளை நோக்கி இராமனை வற்புறுத்தியழைக்கவேண்டுகின்றனன். பரதனே பிறப்பால் அரசாட்சிக்குரியவ னென்பதை உணருமுன் இராமனை வற்புறுத்தி வேண்டியகுடிகள் உணர்ந்தபின் பரதனுடைய வேண்டுதலின்படி இராமனை அழைக்க "இராமன் வரமாட்டேனென்றுகூறுவது நியாயமே. ஆதலின் நாங்கள் அவனை அழைக்கமாட்டோம்" என்றுகூறி மறுத்துவிட்டனர். இவ்வாறு குடிகள் மறுத்ததை உணர்ந்த வஞ்சக இராமன் ஒருவேளை குடிகளின் கூற்றுப்படி இராமனை விட்டுவிட்டுத்தானே அரசாள எங்கே பரதன் ஒருப்பட்டுப்போய் விடுகிறானோ என்று மிக அச்சமடைகிறான். அதனால் உடனே பதறிப்போய் "நான்பதினான்காண்டுகள் காட்டில் வாழ்ந்தபின் நாட்டுக்குவந்து முடிசூட்டிக்கொள்கிறேன்" என்று கூறிவிடுகிறான். பின் பரதன் இராமனை அப்போதே வரவேண்ட இராமன் மறுத்துரைக்கின்றனன். இராமன் அப்போதே வருகிறதற்கும் இணங்கியிருப்பான். ஆனால் உண்மையுணர்ந்த குடிகள் இராமனுடைய வஞ்சனையையும் தீயசிந்தையையும் கண்டு உடனே இராமனுக்குத்தீங்கு விளைக்க முனைந்திடுவரோ என அஞ்சியே பின்னும் பதினான்காண்டு தந்தை சொற்படி காட்டிலிருந்து பின்னர் நாடேற்பதாக இராமன் கூறுகிறான். பின்னர் இராமன் ஆராய்ந்து செய்த சூழ்ச்சி அவனுக்கு அவன் எண்ணிய நலன் முழுதும் பயப்பதாயிற்று. முன்கூனி கைகேசியிடம் எடுத்துக்கூறியாங்கு இராமன் தன் அறிவுடைமையால் வாழ்வடைந்தான், பரதன் தன் அறிவின்மையில் நாடிழந்தான். அறிஞர் இதனை நன்கு சிந்தித்து உண்மையைக் கடைப்பிடிப்பார்களாக.

இராமன் முதலில் பரதனை நோக்கிக் கூறிய போது "உன் மனைவிமார்களை இன்சொற்களால் மகிழ்வித்து நலம்புரிகின்றனையா? அவர்கள் பிற ஆண்களுடன் கலந்துபேசாமல் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கின்றனையா? அவர்கள் சொல்வதை உண்மையென்று நம்பாமலிருக்கிறாயா? மிகவும் சஞ்சலமான தன்மையுடையவர்களாகையால் மறைபொருள்களை அவர்களுக்குச் சொல்லாமலிருக்கின்றனையா? உன் மனைவியர்கள் சம்போக சுகத்தைக் கொடுப்பதனாலும் நற்பிள்ளையைப் பெறுவதனாலும் பயன்படைந்திருக்கின்றனரா?" என்று வினவுகிறான். இதனால் பரதனுக்குப் பல மனைவியரிருந்தனரென நாம்முன் எடுத்துக்காட்டிய உண்மை நிலைபெறுகிறது. மேலும் இராமனும் பல தாரங்களை உடையவனாக இருந்திருக்கவேண்டுமென்று ஊகிக்க இருப்பதோடு முன் இராமன் பலதாரகமனன் என்று எடுத்துக் காட்டிய உண்மையை நிலைநாட்டுவதாகுமெனவும் அறியலாம்.

மேலே இராமன் கூறிய கூற்று அவன் பெண்களைப்பற்றி எவ்வளவு இழிவான எண்ணம் வைத்திருந்தானென்பதையும் ஆரியர் எவ்வாறு பெண்களைப்பற்றிக் கருதினரென்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. பெண்களைப் பிற ஆடவருடன் பேசுதற்கேனும் இடந்தராது பாதுகாக்கவேண்டும், இல்லையானால் அவர்கள் பிற ஆடவரோடு வசப்பட்டுக் கூடிக் கணவனைக் கைவிடுதலும் கூடுமெனவும், பெண்கள் மறை (அந்த சங்கம்) காக்க வல்லமையில்லாதவர்களா கையால் அவர்களிடம் மறை கூறல் கூடாதெனவும், பெண்கள் பேச்சில் நம்பிக்கை வைத்தல் பிசகென்வும், பெண்கள் சம்

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

# ஆம்,
# நாம் நாஸ்திகர் தான்.
## ஆனால் எந்தெந்த வகையில்?

(சாமி சிதம்பரனார் எழுதுவது.)

ஏமாற்றுக்காரர்கள் பாமர மக்களை அஞ்சச் செய்வதற்காகப் பல விதமான கருவிகளை வைத்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் வைத்திருக்கும் கருவிகள், ஆண்மையோடு போர்க்களத்திற் புகுந்து எதிரிகளுடன் எதிர்த்து நின்று சண்டை செய்யும் கருவிகளாகிய வாளல்ல, துப்பாக்கிக் குண்டுகளல்ல, ஆனால் வெறும் வார்த்தைகளாகிய கருவிகளேயாகும். அவ்வார்த்தைகளும், சாதாரண மக்களுக்குப் பொருள் தெரியாத வடமொழி வார்த்தைகளே. அவ்வார்த்தைகள், மோக்ஷம், நரகம், ஆஸ்திகம், நாஸ்திகம், முதலியவைகளாம். எவ்வாறு தற்காலத்தில் காங்கிரஸ், சுயராச்சியம், கதர் என்ற வார்த்தைகளால் அரசியற் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத பாமர மக்களை ஏமாற்றி வந்தார்களோ அது போலவே பழைய அறிவாளிகளான சுயநலமுடைய வைதீகர்கள் மேற்கூறிய பூச்சாண்டிகளால் எல்லா மக்களையும் ஏமாற்றி வந்தார்கள்; வருகின்றார்கள்; இன்னும் ஏமாற்றிக் கொண்டிருக்கப் பார்க்கின்றார்கள்.

மேற்கண்ட பூச்சாண்டிகளுக்கு மயங்காமல் எல்லா மக்களும் உண்மையுணர்ச்சியுடனும், சுதந்தரத்துடனும், பகுத்தறிவுடனும் சமத்துவத்துடனும், அன்புடனும் வாழ வேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடனேயே நமது சுயமரியாதை இயக்கந் தோன்றிப் பாடுபட்டு வருகின்றது. இவ்வியக்கந் தோன்றியவுடன், மூலை முடுக்குகளில் உறங்கிக் கிடந்தவர்களும் விழித்தெழுந்து உலகில் என்ன நடைபெறுகிறதென்பதைக் கவனிக்கத் தொடங்கி விட்டனர்.

இந்த நிலையில் இன்னுஞ் சுயநல வாதிகள்-மக்களை ஏமாற்றி வந்த கூட்டத்தார் தங்களுடைய பாடு திண்டாட்டமாகி விட்டதைக்கண்டு நம்மைப்பற்றி பலவாறு தூற்றி வருகின்றனர். அவர்கள் நம்மைப் பற்றி முதலிற் கூறுவது "நாஸ்திகக் கூட்டத்தார்" என்பதேயாகும், இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய விஷயம் "நாம் நாஸ்திகர்களா" என்பதேயாகும். நம் கூட்டத்தைச் சேர்ந்தவர்களிலேயே சிலர் நாம் நாஸ்திகர்கள் அல்ல என்று வாதிக்க முன்வருவர். ஆனால் நாம் "நாம் நாஸ்திகர்கள் தான்" என்பதை வீரத்தோடு தாராளமாக ஒப்புக்கொள்ள மார்தட்டிக் கொண்டு முன்வரவேண்டும் என்றே கூறுவோம். நாம் எந்த வகையில் நாஸ்திகர் என்பதையும் விளக்கிக் காட்டி விடுகின்றோம். உள்ளதை ஆஸ்திகம் என்றும், இல்லாததை நாஸ்திகம் என்றும் சொல்வது வழக்கம். ஆஸ்திகம், நாஸ்திகம்என்பவற்றுக்குஉண்மைப்பொருள் இதுவேயாகும். இல்லை என்று சொல்பவர்களைத்தான் நாஸ்திகர் என்று கூறுவது. நாம் எவற்றை இல்லை என்று கூறுகின்றோமென்றால் பகுத்தறிவுக்குப் பொருந்தாத பொய் விஷயங்களை யெல்லாம் இல்லையென்று சொல்லுகின்றோம்.

(1) மக்களுக்குள் பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு. அவனவன் முன் பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகளால் தான், இவ்வுலகில் அறிவுடையவனாகவும், அறிவில்லாதவனாகவும், பணக்காரனாகவும் பணமில்லாதவனாகவும் பிறக்கின்றான் என்று ஆஸ்திகக் கூட்டத்தார் கூறுகின்றனர். ஆனால் நாம், ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும், அவனுடைய முயற்சியும் அறிவுமே காரணம் என்று கூறி, முற்பிறப்பைப் பற்றித் தெரியாது என்று கூறுகின்றோம், இவ்வகையில் நாம் நாஸ்திகர் தான்.

(2) நமக்கு இதுவரையிலும் சட்டங்களாக இருந்த சாஸ்திரங்களெல்லாம், கடவுளெல்லாம், கடவுளாலும் கடவுள் அருள் பெற்றவர்களாலும் செய்யப்பட்டன. ஆகையால் அவைகள் தெய்வத் தன்மையுடையன. ஆதலால் அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். அவற்றில் எவைசொல்லப் பட்டிருந்தாலும் அவற்றைக் கண்மூடித்தனமாக நம்ப வேண்டும் என்று ஆஸ்திகர்கள் சொல்லுகின்றனர். ஆனால் நாமோ பகுத்தறிவைப் போல் நல்வழியைக் காட்டுகின்ற சட்டம் வேறொன்றுமில்லை. இப்பொழுது சாஸ்திரங்கள் முழுவதும் சுயநலங் குடி கொண்ட மக்களாற் செய்யப்பட்டன. அச்சாத்திரக்குப்பைகளிற் கிடந்து உழல்கின்ற வரையிலும், நமக்கு ஒரு நாளும் விடுதலை ஏற்படாது; சாஸ்திரங்களெல்லாம், கண்ணிற்கும், மனதிற்கும் பகுத்தறிவிற்கும் எட்டாத விஷயத்தை வளர்த்துக்கூறுகின்றனவேயன்றி வேறு இவ்வுலகிற்குப் பயன் படக் கூடிய விஷயங்கள் ஒன்றையும் சொல்லவில்லை. ஆகையால் நமது விடுதலைக்குத் தடையாக இருக்கின்ற வைதீக சாஸ்திரங்கள் முழுவதையும் சுட்டுப் பொசுக்கிச் சுயமரியாதை முறையிலேயே அவைகளுக்கு இறுதிச் சடங்கு செய்து விடவேண்டும் என்று கூறுகின்றோம். இந்த வகையில் நாம் நாஸ்திகர்கள் தான் என்பதை ஏன் ஒப்புக் கொள்ளக்கூடாது?

(3) கடவுள் என்று சொல்லக்கூடியவர் உருவம் உடையவர், குணம் உடையவர், ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரிகின்றார், அவருக்கெனத் தனி உலகம் ஒன்று இருக்கின்றது, அங்கே அவருக்கு வீடுவாசல்கள், வேலைக்காரர்கள், பெண்சாதி பிள்ளைகள் இருக்கின்றார்கள், அவர் பல சமயங்களில் பிறக்கின்றார் இறக்கின்றார் வியாதியினால் துன்பப் படுகின்றார், அவரும் பொய் சொல்லுகின்றார், திருடுகின்றார், பிற பெண்களைக் காதலிக்கின்றார். அவருக்கும் பாட்டுக்கச்சேரி, வைப்பாட்டி முதலியன வேண்டும் என்று ஆஸ்திகர்கள் கூறுகின்றார்கள். இக்கொள்கைக்கு உதாரணமாகப் பல கதைகளைக் கூறுகின்றனர். அக்கதைகளே புராணமென்றும் இதிகாசமென்றும் கூறப்படுகின்றன. ஆனால் நாமோ, கடவுள் என்ற வார்த்தையே எல்லாவற்றையும் கடந்தது என்ற பொரு[illegible] ஒன்றுந் தெரியாது என்று சொல்லுவதற்கு ஆதாரமாக நிற்பதால் எங்களுக்குக் கடவுளைப் பற்றி ஒன்றுந் தெரியாது. தெரியாத விஷயங்களைப்பற்றி ஒன்றுமே பேசமாட்டோம். ஆனால் நீங்கள் கூறுகின்றபடி ஒரு கடவுள் இருக்கமுடியாது. அப்படி இருப்பினும் அது கடவுள் அல்ல. மனிதனை விட மிகவும் பேராசையும் கவலையும், துன்பமும், கெட்ட செய்கையும் உடைய உங்கள் கடவுளால்ஒன்றுஞ்செய்ய முடியாது. ஆகையால் அத்தகைய கடவுள் வேண்டாம்; இல்லை என்றே கூறுகின்றோம். இந்த வகையில் நாம் நாஸ்திகர் தான்.

(4) புராணங்களாலும் வேதங்களாலும் ஆகமங்களாலும் சொல்லப்படுகின்ற கடவுளுக்குக் (ஒன்றா? இரண்டா? அடே அப்பா! எண்ணத்தொலையாதன) கோயில்கள் கட்ட வேண்டும். அக்கோயில்களிற் கருங்கல்லை நட்டு வைத்துக் கும்பிட வேண்டும். அதற்கு ஒரு சாதியினர்தான் பூசை செய்ய வேண்டும். உயர்ந்த சாதியினர்கள் தான் பொருளற்ற கோயில்களுக்குச் சென்று சாமியென்று சொல்லப்படுவதை வணங்கலாம். மற்றவர்கள் போகக் கூடாது. அந்தச்சாமியையும் நேரே சென்று வணங்கக் கூடாது. தரகர்கள் மூலந்தான் வணங்கவேண்டும். அவைகளுக்கு அடிக்கடி திருவிழாக்கள் செய்ய வேண்டும். அந்தச்சாமிகளுக்கும் நம்மைப் போலவே கல்யாணம், இழவு, காடாத்து, கருமாதிஎல்லாம் நடத்த வேண்டும் இந்த வகையில் ஏராளமான பொருள்களைச்செலவுசெய்யவேண்டுமென்று ஆஸ்திகர் கூறுகின்றனர். ஆனால் நாமோ, உண்மையான கடவுள் என்பவர் ஒருவர் இருப்பாரானால், அவர் எல்லாம் வல்ல சக்தியுடையவராயிருந்தால், அவர் ஆதி அந்தம் இல்லாதவராயிருந்தால், நாம் அவருக்கு கோயில் கட்டி வைக்க வேண்டுவதில்லை. நாம் ஒரு கருங்கல்லை நம்மைப்போல செய்து வைத்து அதற்கென்று ஏராளமான பொருள்களைச் செலவழிக்க வேண்டுவதில்லை. திருவிழாவிற்கென்று அளவற்ற செல்வங்களை அள்ளி இறைக்க வேண்டுவதில்லை. இதுவரையிலும் செய்யப்பட்ட வீண் செலவுகள் போதும். இப்பொழுது இருக்கப்பட்ட கோயில்கள் நிலைத்திருக்க வேண்டுமானால், அவைகள் மக்களை உயர்ந்தவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் பிரிப்பதற்காக இருக்க வேண்டாம். அங்கே எல்லா மக்களும் தாராளமாகத் தடையின்றிச் செல்லுவதற்கு அனுமதிக்க வேண்டும். சாமியின் பேரைச் சொல்லிக் கொண்டு சிலர் வயிறுவளர்ப்பதற்காகச்சாமிகளுக்கும் கலியாணம், இழவு, காடாத்து, கருமாதி என்ற பெயரை வைத்துக் கொண்டு வீண் செலவு செய்ய வேண்டாம். இவ்வாறு செய்யும் வீண் செலவுகளை ஏழைமக்களின் துயரத்தைப் போக்குவதற்கும், மக்களுடைய அறிவை வளர்ப்பதற்கும், நாட்டிலுள்ள வறுமைத்துன்பத்தை ஒழிப்பதற்கும் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றோம். பயனின்றிப் புதிதாகக் கோயில்கள் கட்டுவதை விடப் பள்ளிக்கூடங்களைக்கட்டுங்கள்! ஆஸ்பத்திரிகளைக்

(இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

## சைவக் கூட்டம்.

சைவமுதியர் எழுதுவது.

இக்கூட்டம் திருநெல்வேலியில் கூடிற்று. பட்டம்பெற்ற சைவர்களும் சைவப்பழங்களும் சென்னை, செங்கல்பட்டு, ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, நாகர்கோயில், யாழ்ப்பாணம் ஆகிய பலவிடங்களிலுமிருந்து வந்து குழுமினர். அவர்கள் கூடிப் பேசியவற்றின் பயன் யாது என்று வினவுதலியற்கை. சைவப்பற்றுக்குறைந்து போலிச்சைவமிகுந்து களை பயிரைத் தலையெடுக்காமற்செய்வதுபோல சைவத்தினருமையை அழித்துவிட்டது. அதற்கு முக்கியமான காரணம் உண்மையான சைவ மீதென்று அறியாமையே. திருநீறுபொலிந்தும், தாழ்வடங்கள் சிறந்தும், மனத்தூய்மையும் அன்பு மொழிந்தும் வந்தமையால் கன்னக்கோல் தாங்கும் வினைஞராகக் கருதப்பட்டது. பாத்திரம் சிவமென்றுணரின் மாத்திரைப் பொழுதில் அருள் கிடைக்குமென்பர். சைவவொழுக்கந் தழைக்குமாறு ஏற்பட்ட ஆலயங்களும் மடாலயங்களும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்யாமையால் சைவம் பாழ்படுகின்றது. சிவாலயங்களில் சிவதீட்சை பெறுதபிராமணன் நுழையலாகாது. அவன் திருமேனியைத் தீண்டலுமகாது. கூலி வேலைக்கு ஏற்பட்டவன் கூலிக்குமேல்உடைமையும் உரிமையும் பெற்று வருகிறான். சைவர்கள் கோயில்களில் சிவத்தை நேரில்தொழ விடுகிறானில்லை. சட்டங்களும் அவனுக்கு அனுசரணையாகஇருக்கின்றன. சட்டங்களைத் திட்டத்திற்கொண்டுவருபவரும் அவனினத்தாராதலின் சைவம் சவமாகிவிட்டது. சைவர்கள் மனவொருமைப்பட்டு அர்ச்சனையாதிய பணப்பறிக்கும் வருவாய்களை நிறுத்தி தெய்வவழிபாடு செய்வரேல் கோயிலில் அவன் அதிகாரமொழிந்துவிடும். சண்டைச்சச்சரவில்லாமல் காசி, கோகர்ணமாதிய விடங்களில் வழிபாடு நிகழ்வது இவணும் நிகழும். சைவமின்னதென்றறியாத சைவப்பழங்கள் ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு ஆகமத்தைப்பற்றி நடக்கும், காசி கோகர்ண வழக்கம் இவண் பொருந்தாது என்றுகூறி வெற்றிபெற்றனர். ஆகலால் பூசாரி இன்றியமையாதென்று ஏற்பட்டது. தானனின்றுந் தெய்வ வழிபாடு செய்தல் தவறு என்று முடித்தனர்.

வேதம் அனைவருக்கு முரிய நூலன்று. தரைத்தேவர்கட்கே உரித்துடையது. தரைத்தேவர்களும் அதனையறியார் எச்சடங்கும் அதனிலுளதென்றும் தமிழ்மொழியிலில்லாத ஆகமங்களே கோயில் வழிபாடுகட்கு மூலமென்றும் அவற்றை அறிந்ததாகப் பிதற்றும் நூல்தரித்த மக்களின் சொல்லே வேதாகமமென்றும் கொண்டு குருடன் குருடனுக்கு வழிகாட்டியவாறு ஆலயவழிபாடு கெட்டது. மடாலயங்களிலுள்ள மடாதிபதிகளும் பெரும்பான்மையும் நிரக்ஷரகுக்ஷிகளாய் சிற்றின்பக்கடலில் விழுந்து விழுந்து கோத்தைப் போக்குகின்றனர். மூடசிகாமணிகளை ஒழித்துவிட்டு அறிஞர் கலைஞர்களைச் சந்நிதானங்களாக அமைக்கும் உரிமை மடாலயங்களைச்சேர்ந்த தமிழ் மக்களிடம் உள்ளது. கையிலுள்ள அதிகார வெண்ணையை நெகிழவிட்டு மடத்தலைவர்களிடம் நெய்கேட்டாற்போன்று காலமாறியது. ஆலய கர்த்தர்களும் மடாலய கர்த்தர்களும் சைவம்இத்தகைத்தென்று அறியுமாறுசெய்தல்முதற்கடமையாகும். மக்களுக்குநல்வழியும் ஒழுக்கமும் போதிக்குமாறு தமிழ்மக்களாலளிக்கப்பெற்ற இலக்ஷக்கணக்கான சொத்துக்களின் வரும்படி வீண்போகின்றதே, ஏழை எளியமக்களுக்கு கல்விபளிப்பின் ஒழுக்கஞ்சிறக்குமன்றோ. ஒழுக்கஞ் சிறக்கச் சிறக்க ஒற்றுமை யுண்டாகுமன்றோ. ஒற்றுமை யுண்டெனில் நாடு சீர்பெறுமன்றோ. என்னமாதிரி நெறிமீறி நடப்பவர்களை நெறிப்படுத்துவதென்றஎண்ணமே தனிக்கூட்டத்தார்க்குப் புலப்படவில்லை. ஒற்றுமைக்குறையும் உண்மையறிவுணர்ச்சிக்குறைவுமே அடிமை நிலைமைக்கு அடிப்படையாகின்றன. அறியாமையால் வரும் வீண்பெருமை மிக்க கேடுவிளைவிக்கின்றது. மனிதன் தன் குறையை நேரில்சொல்லத் தரைத்தெய்வமிடங் கொடுக்கவில்லை. பார்ப்பான் தன்னுரிமையைக்காப்பாற்ற உயிரை யிழப்பனன்றோ? திருச்செந்தூரில் முக்காணியர்கள் இடங்கொடுப்பார்களோவென்று இக்கூட்டத்தைச் சிறப்பிக்கவந்த சைவப்பழமொன்று என்னிடங்கூறியது. அந்தோ! அறியாமையின் அகலமும் ஆழமும்!

சைவப்பழங்கள் மற்றொன்றிற்கு இணங்கியது வியப்பினும் வியப்பே! இதுவரை கோயிற்கண் புகவுரிமைபெறாத பலவகுப்பு மக்களும் பறையர்களும் புலையர்களும் சைவவொழுக்கமும் சைவவுணர்வும் எய்திச்சைவராகப் பதிவுசெய்வாராயின் சிவசந்நிதிக்குப் போகத்தடையில்லை. சமத்துவம்பாராட்ட வுரிமையுண்டென்பதே. இது நாளடைவில் வளர்ந்துவரும் நவநாகரிகப் பயனேயாம். கடற்பெருக்கை விளக்குமாற்றினால் மாற்ற முடியுமா?

வியக்கத்தக்க மற்றொன்றும் இத்தனிக்கூட்டத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது. சைவத்தைக் கைவிட்டு ஏனைய சமயத்தில் புகுந்தாரும் ஏனையசமயத்தில் பிறந்து சைவராக விழைவாரும் சைவசமயிகளாகலாமென்பதே. எடுத்துக்காட்டாகிய அப்பமூர்த்தி காலந்தொட்டு வைதிகசைவர் நுழைந்ததன் காரணமாக அப்பமூர்த்தியின் உதாரணத்தைச் சைவமக்கள் நினைத்து மனத்திடங் கொள்ளாது பயந்து நல்லொழுக்கத்தைதீய நடையாகக்கருதி மீட்டும் சைவம் தழுவ நினைத்தவர்களுக்குப் புகலிடங்கொடுத்தார்களில்லை. இதுவேதாகமக் கொடுமையேயாம். தமிழ்மக்கள் தனிநிலைமையற்றுப்பிறர் வாலைப்பிடித்துப் பின்செல்லுதலிழிவான நடையேயாகும். ஆங்கிலங்கற்றுப் பெரிய பெரிய பட்டந்தாங்கிவரும் கோழைத் தமிழ்மக்களை எத்தகையவரென்று சொல்லுவோம்.

பெரியரெனப்படும் பெருந்தகையாளரும் மக்களேயாதலின் தவறுசெய்தல் இயல்பேயாம். அன்னார் குற்றஞ்செயினும் பொன்போற் போற்றத்தகுமென்பது உண்மையெனினும் அன்னார் குறைகளையுணர்ந்து அக்குறைகளைப் பின்பற்றுதொழுகல் நமது கடமையன்றோ. சமயக்குரவரும் மக்கட்பிறப்பினரே. ஆணவமிகுந்த சகலாக பண்டிதரும் சைவ மக்கள் போற்றும் குரவரல்லரோ? நாயனர் கூறியவாங்கு உண்மையை (மெய்ப்பொருளை) யறிதல் அறிஞர்கடமையாகும். ஒன்று பிழையென்றறிந்தும் பழமைபாராட்டி மதியிழந்தொழுகல் மடமையினும் மடமையாமன்றோ? உலகம் இழித்துக்கூறுமென்று நடுக்குற்று மெய்ப்பொருளை யிழப்பவர் பகுத்தறிவினராவரோ? இத்தனிக் கூட்டத்தாரிற் சிலர் சிவாகமப்பிதற்றால் சுயவறிவிழந்து முன்னேற்றமடையாமல் இழிந்த நிலையில்இன்றுமிருந்து வருகின்றோமென்றறிந்தும் உலகமென்பது உயர்ந்தோர் மாட்டதென்று கருதாமல் மூடம் நிறைந்த கூட்டமே யுலகமென்றெண்ணி அறிவுமழுங்க நடந்துவருதல் மக்கள் செயலாமோ? பகவன் உலகுக்குமுதல். அவனை வணங்குதல் கடமை. மாசிலாத மனத்தோடு வாழ்தல் நலம் அறிவுகொளுத்துதல் பசிப்பிணி தீர்த்தலின் மேம்பாடுடையது. சகோதரத்துவம் பாராட்டி அனைவரும் ஒத்துவாழுதல் தலையான வொழுக்கமன்றோ! சைவக்கூட்டத்தார் இவற்றைக் கவனித்து ஒழுகுவராயின் அன்னார் முயற்சி நலமெய்தும் நாடும் நலம்பெறும். சுயமரியாதையைப் பொன்போல் போற்றுபவரே மேம்பாடடைவர். அவரால் உலகமும் செந்நெறிச்சென்று உய்யும். இறைவனருள்க.

இக்கூட்டம் நிகழ்ந்த மூன்று நாட்களிலும் கடவுள், ஒழுக்கம், முப்பொருளுண்மை, கொல்லாமை, ஊனுண்ணாமை, ஆகிய பல பொருள்கள்பற்றி பெரும்பேச்சுகள் நிகழ்ந்தன. நன்றிகூறியதுடன் கூட்டம் கலைந்தது.

---

## திம்மனூர் வாலிபர் சன்மார்க்க சங்கம்.

சுக்கில வருஷம் சித்திரை 12 ந் தேதி (24-4-29) புதன்கிழமை மேற்படி சங்கத்தின் 2 வது ஆண்டு நிறைவு விழா சிறுமுகைக் கடுத்த கூத்தாம்பூண்டி சமாச சுநவனமென்னும் மாந்தோப்பில் அமைத்துள்ள பந்தலில் காலை மாலை முறையே திருவாளர் பி. எ. அய்யாமுத்து அவர்களுடையவும் திருவாளர் என். நஞ்சப்பா அவர்களுடையவும் தலைமையில் நடைபெறும் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## தேவாப்பன்பட்டி.

25-3-29 தேதி தேவாப்பன்பட்டி சௌடாம்பிகா வாசகசாலையில் திரு. என். சங்கரசுப்பு அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. சுமார் 500 பேர் கூடியிருந்தனர். திருவாளர்கள் ஏ. எல். சவுடப்பன் எம். ஆழ்வார், ஏ. ராமசாமி, கே. எம். என். பி. நடராஜன் வி. எஸ். கே. சுப்பையா முதலியவர்கள் பிரசங்கித்தார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று திரு. வி. எஸ். கே. சுப்பையா தெரிவிக்கிறார்.

---

# சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி

### காங்கிரஸ் கட்சித் தலைவர்

## திரு. சாமி வெங்கடாசலம் செட்டியாரின் மயக்கமும் திரு. இராமசாமி முதலியாரின் விளக்கமும்,

5—4—29 தேதி சென்னை கோக்கலே மண்டபத்தில் பார்ப்பனரல்லாதார் சமரச சங்க இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா திரு. எ. இராமசாமி முதலியார் தலைமையின்கீழ் நடைபெற்றது. அப்போது திரு. சாமி. வெங்கடாசலம் செட்டியார் செங்கற்பட்டு மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கட்கு விரோதமாகப் பேசினார். அவர் பேசியதின் சாரம்சம் வருமாறு:—

நான் சமீபத்தில் சுயமரியாதை மாகாண மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைப் பற்றிப் பேசுகிறேன்.

நீங்கள் உங்கள் அறிக்கையில் பார்ப்பனரல்லாத குருக்களைக் கொண்டு எல்லாச் சடங்குகளையும் நடத்த வேண்டுமென்றும் அதைப் பிரசாரம் செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். இது நியாயமென்றே எனக்கும் தோன்றுகிறது.

சைமன் கமிஷன் விஷயத்தில் எனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவேயில்லை.

ஜாதிப்பட்டங்களை நீக்கிவிட வேண்டுமென்று தீர்மானித்த செங்கற்பட்டு மகாநாடு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்கேட்கலாமா?

வருணாசிரம தருமத்தினால் நன்மையுண்டு. அமெரிக்கா முதலிய தேசங்களிலும் தொழில், செல்வம், சமூக வாழ்வு முதலியவற்றைக் கொண்ட வித்தியாசமிருந்து வருகிறது. மனிதன் இன்று பணக்காரனாயிருக்கலாம். மறுநாள் ஏழையாகி விடலாம். பணத்தைக்கொண்டு மேல் நாடுகளைப் போல் நாம் ஜாதி வித்தியாசம் பாராட்டுவதை ஆதரிக்கலாமா? வருணாசிரமத்தில் சில தொல்லைகளிருக்கலாம். ஒழுங்கான சமூக அமைப்பை உத்தேசித்து அத்தொல்லைகளைச் சகித்துக்கொள்ள வேண்டியதுதான். இதைக்காட்டிலும் வேறு ஒரு முறையை ஏற்படுத்த முடியுமா?

"ராவ் பகதூர்" "ராவ் சாஹிப" பட்டங்கள் வேண்டுமென்று கூறும் போது ஜாதிப் பட்டங்களை ஏன் விடவேண்டும்? ஒவ்வொருவரும் இன்னின்ன ஜாதி என்று காட்டுவதற்கு அவரவர்க்குரிய அடையாளம் தரிக்க வேண்டும்.

விவாகரத்து கூடாது. நாம் ஏக பத்தினி விரதரா யிருக்கவேண்டும். மேனாடுகளில் உள்ளவர்கள் விவாக ரத்துக்களினால் பல சங்கடங்களை அனுபவிக்கின்றனர். விவாக ரத்து இளைஞர்களைக்கெடுத்துவிடும்.

நம்முடைய மனம் பலவழிகளில் செல்லுவதைத் தடுக்கும்பொருட்டு ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நாடகங்களுக்கும் சினிமாக்களுக்கும் ஆடம்பரமாகச் செலவு செய்வதை கோவில் பூஜை விஷயத்தில் செலவழிக்கக்கூடாதா என்று கேட்கிறேன்.

---

திரு. எ. ராமசாமி முதலியாரின் ஆணித்தரமான விளக்கவுரை:—

நண்பர்களே! நான் இந்த அக்கிராசனப் பதவியை ஏற்றுக்கொள்ளும்போது முடிவுரையில் இவ்விஷயம்பற்றி அதிகம் பேச வேண்டியிருக்குமென்று நினைக்கவில்லை. ஆனால் திரு சாமி வெங்கிடாசலம் செட்டியாரவர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கும் செங்கற்பட்டுச் சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானங்களுக்கும் விரோதமாக எவ்வளவு தூரம் பேசலாமோ அவ்வளவு தூரம் பேசிவிட்டதினாலே அவை சம்பந்தமாக ஏற்படக்கூடிய பல சந்தேகங்களை ஒழிக்கவேண்டி நான் இக்கூட்டத் தலைவன் என்ற முறையில் பேசக்கூடியதைவிட சிறிது அதிக நேரம் பேசவேண்டி யிருக்குமென்று நினைக்கிறேன். இவை சம்மந்தமாக என் சொந்த அபிப்பிராயங்களையும் தெரிவிக்கிறேன்.

திரு சாமி வெங்கிடாசலம் செட்டியாரவர்கள் தம் அபிப்பிராயங்களை மிகக் கண்ணியமான முறையில் நமக்கு எடுத்துக்கூறியதற்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். முன்னேற்ற சம்மந்தமாக பலதிறப்பட்ட மாறுபாடான அபிப்பிராயங்கள் சிலருக்கு இருக்கலாம். எனினும் திரு சாமி வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள் இவ்விஷயங்களைப் பற்றி மிகவும் கவலை செலுத்தி இருக்கிறார். நான் இப்போது அரசியல் விஷயங்களை எடுத்துப்பேசவில்லை. நம் நண்பர் திரு சாமி வெங்கிடாசலம் செட்டியார் அரசியல் சம்மந்தமாக பட்டும் படாமல்தான் பேசினார். சைமன் கமிஷன் சம்மந்தமாக நாங்கள் இருவரும் ஒத்த கொள்கையோடிருக்க முடியாது. இதுபோன்ற பல விஷயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் வேறுபடலாம்.

வேறு எந்த ஆதாவிலும் எந்த மேடையிலும், பட்சபாதமில்லாத எந்தக் கூட்டத்தார் முன்பாகவும் எங்கள் இருவர் அபிப்பிராயங்களையும்பற்றி பேசச்சொன்னால் பேச எனக்கு எவ்விதமான ஆட்சேபனையுங்கிடையாது. சைமன் கமிஷனை பஹிஷ்கரிப்பதற்குப் போதிய காரணங்களை அவரும் சொல்லலாம். கமிஷனை வரவேற்பதற்குப் போதிய காரணங்களை நானும் சொல்லுவேன். ஆனால் நான் ஒன்றுமாத்திரம் உறுதி கூறுவேன். அதாவது, அவர், என்னைப்பற்றியாவது என்னைச் சேர்ந்தவர்களைப்பற்றியாவது ஏதாவது தெரிந்துகொண்டிருப்பார்களானால் அதிலிருந்து நானாவது எனது கட்சியைப்பற்றியவராவது சந்தர்ப்பத்திற்கேற்ற விதமாக நடந்துகொள்ளவில்லை என்று அவர் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். (கேளுங்கள் கேளுங்கள்) நான் இப்போது அரசியல் சம்மந்தமாகப் பேசுவது முறையாகாது.

### நேரு யதாஸ்து

நான் நேரு யாதாஸ்து சம்மந்தமாகவும் எதுவும் பேசப்போவதில்லை. அதிலுள்ள சில விஷயங்களை நான் ஆதரிக்கிறேன். கமிட்டி கூட்டத்திற்கும் போயிருந்தேன். கல்கத்தாவில் அந்த கூட்டத்தின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுவதாக இருந்தேன். ஆனால் சர்வ கட்சி சங்கத்தின் நூதனமான உத்தரவுப்படி நான் கலந்துகொள்ளக் கூடாமற்போயிற்று. "நேரு கமிட்டி யாதாஸ்தில் சொல்லப்படாததாகிய வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டுமென்று கூறுகிற நீங்கள் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதாகச் சொல்லுகிறீர்களே" என்று நம் நண்பர் கேட்டார். இதை நான் ஓர் யுக்தியென்றுதான் சொல்லுவேன். (சிரிப்பு) நாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டுமென்பது இப்போதைய தேவைக்குத்தான் (கரகோஷம்) நமக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ சுயேச்சையோ வருமானால் அத்தோடு கூடவே நமக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் வேண்டும். ஏனென்றால் சீர்திருத்த மசோதாக்களோ, தீர்மானங்களோ, சர்வ கட்சி மகாநாட்டுத் திட்டங்களோ வரும்போது இந்த சாதிப் பிரிவினைகளையோ, வருணாசிரமத்தையோ அழித்துக்கொண்டுவாரா. சீர்திருத்தங்கள் கிடைத்தபிறகு அதன்மூலம் ஜாதி வித்தியாசமும் வகுப்புச் சுயநலமும் ஒழியும்படி ஓர் திட்டத்தை ஏற்படுத்தி சட்டங்கள் செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்தபிறகு வகுப்புவாரி உணர்ச்சி தானாகவே மறைந்துவிடும். ஆதலால் நாம் எதிர்பார்ப்பதைவிட கூடிய சீக்கிரத்தில் நமக்கு இந்நிலை சித்தியடையட்டும். அதற்கு நாம் பாடுபடுவோம். அன்றியும் பார்ப்பனரல்லாத சமூகத்தைச் சேர்ந்த நாம் சம்மந்தப்பட்டவரையில் வரவர வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப்பற்றிய கவலை குறைந்துகொண்டுதான் வருகின்றது. உதாரணமாக சைமன் கமிஷனுக்கு முன் நான் என் சார்பாகவும் என் கட்சியினர் சார்பாகவும் சாட்சி சொன்னபோதுகூட எங்களுக்கென தனிஸ்தாபனம் இப்போது ஒதுக்கப்பட்டிருப்பதுபோல் ஒதுக்கப்படவேண்டிய அவசியம் இல்லையென்றும், இந்தப்படி ஒரு ஒதுக்குமுறை எங்களுக்கு வேண்டாமென்று நாங்கள் கூறியும் எங்கள்மீது அது பலவந்தமாய் சுமத்தப்பட்டது என்றும் தெளிவாக எடுத்துச் சொன்னேன், ஆனால் நம்மைவிட இன்னும் பிற்பட்ட நிலையிலுள்ள வகுப்பாரின் முன்னேற்றத்தையும் உத்தேசிக்கவேண்டியிருப்பதில் அவர்களுக்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டுமென்று நாம் வற்புறுத்தவேண்டி யிருக்கின்றது. அனைவருக்கும் ஒரேமாதிரி நீதி வழங்கப்படவேண்டுமென்பதற்காகவும், அரசியலிலும் சமத்துவம் வேண்டுமென்பதற்காகவும், பற்பல காரணங்களால் கல்வியில்லாமல் அஞ்ஞானத்தில் முழுகியிருக்கிறவர்கள் முன்னேறவேண்டுமென்பதற்காகவும் நாம் வகுப்புவாரி பிரதிநிதித்வத்தை கவனிக்கவேண்டியவர்களாயிருக்கின்றோம். நமக்குப் பின்னால் உள்ளவர்களுக்கு நாம் உதவி செய்யாமலிருப்போமேயானால், நாம் நம் கடமைகளைச் செய்யாதவர்களாகவும் கண்டனத்

திற்கு ஆளாகனவர்களாவும் ஆவோம். ஆனால் நான் முன்பு கூறியபடி இவ்விஷயங்களைக் குறித்துப் பேசுவதற்கு மேடையும் இடமும் இதுவல்ல.

நிற்க, சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களில் சிலவற்றைப்பற்றி எனக்கிருந்த ஆக்ஷேபனைகளை அந்த மகாநாட்டிலேயே தெரிவித்து விட்டேன். ஆனால் அந்தத்தீர்மானம் நிறைவேறும்போது நான் அங்கிருந்தால், என் ஆக்ஷேபனைகளைச் சொல்லி சமாதானம் தெரிந்திருப்பேன், ஆனால் நான் சென்னையிலிருந்து அன்றைபத்தினம் சாயங்காலம் தான் செங்கற்பட்டுக்குப் போகநேர்ந்தது. நான் போகுமுன்பாகவே தீர்மானங்களெல்லாம் நிறைவேறி விட்டன. எனினும், மகாநாட்டின் இறுதியில் வந்தனம் கூறும்படி கட்டளையிட்டதற்குச் சம்மதித்துப் பேசும்போது, சில தீர்மானங்களை மட்டும் அப்படியே ஒத்துக் கொள்ள முடியாத எங்கள் அபிப்பிராயங்களை தெளிவாக வெளியிட்டேன். ஆனால், ஷை மகாநாட்டில் நிறைவேறிய பெரும்பாலான தீர்மானங்களை எல்லாம் நான் ஒப்புக் கொள்ளாவிட்டால், என் மனச்சாட்சிக்கும் என்சமூகத்திற்கும் துரோகம் செய்தவனாவேன். (கரகோஷம்) உதாரணமாக மிகக்கொடிய அநீதியான சமுதாயப் பழக்க வழக்கங்கள்.

வருணாசிரம தர்மத்தை எடுத்துக் கொள்ளுவோம். கொள்கையில் எது எப்படியிருந்தாலும் நடைமுறையில் மிகக் கொடுமையானதும் அநீதியானதுமான சமுதாயப்பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையானவருணாசிரமத்தை எதிர்த்து முதன் முதலாகப் பேசியது இந்த செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டில். (கேளுங்கள் கேளுங்கள் பலத்த கோஷம்) பிரம்மஞானக் கூட்டங்களில், இந்நாட்டிலுள்ள சாதி வேற்றுமைகளையும் இங்கிலாந்திலுள்ள வகுப்பு வேற்றுமைகளையும் ஒப்பிட்டு ஜாதி வித்தியாசம் ஒழிப்பதை எதிர்த்துப் பேசிய காலம் மலையேறி விட்ட தென்று நினைத்து விட்டேன். அது ஒரு செத்த சமாதானமாய் விட்டது. இங்கிலாந்திலுள்ள ஜாதி வேற்றுமைகளைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் இங்கிலாந்திற்குப் போய்ப் பார்த்து வந்தாரானால், நான் சொல்வதையெல்லாம் அப்படியே ஒப்புக் கொள்ளுவார். அப்போது இங்கிலாந்திலுள்ள வகுப்பு வேற்றுமை இந்தியாவிலுள்ள வருணாசிரம தர்மத்தைப் போலிருக்கிறது என்று நம்பமாட்டார். நம் பிரசங்கியார் சொன்னபடி ஜாதிப்பிரிவிலும் உட்சாதிப் பிரிவிலும் ஜனநாயகத்துவமிருக்க வேண்டுமென்று பேசுவது அவசியந்தான். வார்த்தையளவில் அது சரியாகத்தோன்றலாம், ஆனால் ஒரு கூட்டத்தார் உன்னத லோகத்திலும் இன்னொருவகுப்பார் பாதாளலோகத்திலும் இருக்கவேண்டும் என்னும் சமுதாயக்கட்டுப்பாட்டை அப்படியேவைத்துக் கொண்டு ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுவது உண்மையான ஜனநாயகத்திற்கு சிறிதும் பொருந்தாத விஷயமாகும். ஏனெனில் இப்படிப்பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் வகுப்பார் விஷயத்தைக் கவனியாமல் ஜனநாயகம் பெற்றால் அவ்வகுப்பார்மற்றவர்களைப்போல் முன்னேறி சொத்தோ உத்தியோகமோ சென்னை மகாகாண முதன் மந்திரித்வம் போன்ற பொறுப்போ எதிர்க்கட்சித் தலைமையோ அடைய ஒரு விதத்திலும் வழியில்லை (சிரிப்பு,) நமக்கெல்லாம் உரியதாகவுள்ள சம அந்தஸ்தை அவர்களுக்கும் கொடுப்பதற்கு வருணாசிரமங்களை ஒழிக்காத எவ்வித ஜனநாயக திட்டத்திலும் இடமுண்டாகாது. ஆதலால் வருணாசிரம தருமத்தைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு அதைக்காப்பாற்ற அலைபவர்களுக்கே இந்தக் கொடுமைகளை ஞாபகப் படுத்துகிறேன். உலகத்தில் இந்தக் கொடுமைக்கு ஒப்பான கொடுமை வேறு எது இருக்கிறது? உன்னத பதவியிலிருப்பதற்கு ஏற்ற தகுதிகள் யிருந்த போதிலும், மேலும் செல்வாக்கிலும் அந்தஸ்திலும் இந்த லௌகிக உலகில் எவ்வளவு மேம்பட்டிருந்தாலும் வருணாசிரமம் காரணமாக அந்த பதவிகள்உங்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது.

### மதக்கொள்கை.

ஆலயப் பிரவேசத்தை எடுத்துக் கொள்ளுவோம். இது ஒரு முக்கியமான பிரசினையாகும். அதை பலர் ஒத்துக் கொள்ளுகிறார்களோ இல்லையோ, அதைப்பற்றி கவலையில்லை. எப்படியும் ஆலயப்பிரவேசத்திற்கு உள்ள எதிர்ப்புகளை நாம் எதிர்த்துத்தானாக வேண்டும். தேர்தல் சம்பந்தமாக இவ்விஷயமும் பிறவிஷயங்களும் ஒரு சமயம் நாம் வெற்றிபெற தடையாயிருக்கலாம். ஆனாலும் இது ஒரு மிகவும் முக்கியமான பிரசினை என்றே நான் வற்புறுத்திக் கூறுவேன். (கரகோஷம்) எந்த விதத்திலும் இந்த பிரச்சினையை நாம் அமுலுக்கு கொண்டு வந்துதான் தீரவேண்டும். செல்வத்தினாலும் அந்தஸ்தினாலும் வேற்றுமை இருந்து தான் தீரும் என்று சொல்லுகிறீர்கள். அதை ஒப்புக் கொள்வதானாலும், ஒருசாதியாரில் செல்வமும் அந்தஸ்து முடைய ஒருவன் நம் நாட்டிலுள்ள கோவில்களுக்குள் போய், ஜாதி, பிறவி உயர்வு தாழ்வு, கௌரவம் அந்தஸ்து முதலியவை யாதொரு வித்தியாசமும் பாராட்டாதவர் என்று எல்லா சாஸ்திரங்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டதான ஒரு கடவுளை வணங்க முடியாத நிலைமையிலிருக்கின்றதற்கு என்ன காரணம் சொல்லக் கூடும்?

எனது நண்பர் எந்தமதத்திற்காகப்பரிந்து பேசுகிறாரோ அதே மதத்தின்பேரால் அந்தமதக் கோவிலுக்குள் போகக்கூடாதவர்களென்று ஒரு வகுப்பினரை ஒதுக்கி வைத்திருப்பது எந்தவிதமான ஜனநாயக நீதி என்றுதான் நாங்கள் கேட்கிறோம். (வெட்கம் வெட்கம்) வெட்கமென்று கத்துவதில் பிரயோஜனமில்லை. இதைநாம் ஆதரித்து வருகிறோமா இல்லையா? சுமார் 2000 வருஷங்களுக்குமுன்னர் இருந்தநிலைமைக்கு இந்தமுறை ஒருசமயம் ஏற்றதாயிருந்திருக்கலாம் (சிரிப்பு) ஆனால் இன்றைய மக்களை இந்தக்கொடிய வழக்கம் எவ்வளவு கேவலமான நிலையில் வைத்துவிட்டது என்று பாருங்கள். நானும் ஒரு மதப்பற்றுடையவன்தான். அதிலும் சிறப்பாக நான் வேதாந்த மதத்தை நம்புகிறவன். என்றால் இயன்றவரையிலும் அதன் கொள்கைகளைப் படித்திருக்கிறேன். அதில் என்ன சொல்லுகிறதென்றால்:—

“மனிதன் கடவுள் உருவம் பெற்றவன். கடவுள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பிரதிபலிக்கிறார்.” அப்படியானால், வருணாசிரம தர்மக்கொள்கை, வேதாந்த மதக் கொள்கையை ஒப்புக்கொள்ளுகின்றதா? முரண்படுகின்றதா? என்பதை யோசித்துப்பாருங்கள். மதப்பற்றில்லாத ஒருவனுக்குக்கூட தெருக்களில் போகும் ஒரு சண்டாளன் எனப்படுபவனின் நிழல்பட்ட மாத்திரத்திலேயே தீட்டாகி விடுவதாயும், அந்தச்சண்டாளன் எனப்படுபவன் கோவிலுக்குள்போனால் சுவாமிக்கும் தீட்டுவந்து விடுமென்றும் நீங்கள் சொல்லுகிறீர்களா? அப்படியானால் உங்களுக்குள்ளிருக்கிற அதேகடவுள்தான் அந்தச் சண்டாளனெனப் படுபவனுக்குள்ளுமிருக்கிறார் என்பதை மறுக்கின்றீர்களா? நண்பர்களே இக்கொடிய வருணாசிரமமிருந்து இதுவரை அது நமக்கு என்ன சாதித்திருக்கிறது? என்பதை நினைத்துப்பாருங்கள். இந்த வருணாசிரமதர்மம் ஒரு சாராருக்கு உயர்வையளிப்பதற்காக மட்டும்தான அவர்கள் அதைத்தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறார்களேயொழிய வேறில்லை. நாமும் மற்றவர்கள் மேன்மைக்கும் நமது இழிவுக்கும்தான் வருணாசிரமத்தை கட்டிக்கொண்டு அழுகின்றோம.

இந்த வர்ணாச்சிரம தர்மந்தான் மற்ற எல்லாக் கொடுமைகளிலும் மேலான கொடுமையை அடிப்படையாகக்கொண்டு உண்மையான ஜனநாயகத் தத்துவத்திற்கு விரோதமாயிருக்கிறது. எனவேதான் இந்தக்கொடிய வித்தியாசத்தையே ஒழிக்கவேண்டுமென்ற ஒரு புதிய உணர்ச்சி மக்களுக்குள் இப்போது வெகு பலமாக உண்டாகியிருக்கிறது.

“இந்த வருணாசிரம தர்மத்திற்குப் பதிலாக வேறொரு தருமம் இதைவிட மேலானதாக ஏற்படவில்லை” என்னும் காரணத்திற்காக மட்டும் நாம் இதை ஒத்துக்கொள்ள முடியாது.

### தேசபக்தனும்

பட்டம் சம்பந்தமாக அதிகம்சொல்ல நேரமில்லை. பட்ட வேட்கை மனிதர்களின் இயற்கை சுபாவம், சிலர் அரசாங்கப் பட்டங்களை நாடலாம், மற்றும் சிலர் இதர பட்டங்களை நாடலாம். “தேசபக்தன்” என்னும் பட்டத்தை விட “ராவ்பகதூர்” என்னும் பட்டம் எப்படிக்கேவலமானது? (சிரிப்பு) இரண்டும் மனிதனுக்குள்ள வீண்டாம்பீகத்தையே ஆதாரமாயுடையவைகளாயிருந்தபோதிலும் அந்த டாம்பீகமும் எல்லா மனிதருக்கும் இயற்கைதானே? “ராவ்பகதூர்” பட்டம் பெற்றவர் கழுத்தில் ஒரு அழகிய கயிறுதொங்கும். இன்னொருவர் தன்னை “தேசோத்தாரகர்” என்று விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார். இருவருக்கும் ஒரேவிதமான உணர்ச்சிதான் உண்டாகிறது. நாம் பள்ளிக்கூடங்களில் படிக்கும் போது முதலியார், பிள்ளை முத

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

## வேண்டுகோள்.

நமது "குடி அரசு" "ரிவோல்ட்" பத்திரிகைகளுக்கு புதிய சந்தா சேர்ப்பதற்கும் பழைய பாக்கிகளை வசூல் செய்வதற்கும் திரு. ராவணதாசன் அவர்களை கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு அனுப்பியுள்ளபடியால் ஆங்காங்குள்ள நமது மெய்யன்பர்கள் தங்கள் தங்கள் பழைய பாக்கிகளைக் கொடுப்பதோடு புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொடுத்து ஆதரிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம். மானேஜர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு சுக்ல ௵ சித்திரை-௴ 2-உ.

## வருணாசிரம மகாநாடு.

சென்ற வாரம் 'இரண்டு மகாநாடுகள்' என்னும் தலைப்பின் கீழ் நமது முன்னேற்றத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளைப்பற்றி எழுதி முதலாவதாக சைவப் பெரியார் மகாநாட்டைப்பற்றி குறிப்பிட்டு விட்டு இந்த வாரம் வருணாசிரம மகாநாடு, பார்ப்பனர்கள் மகாநாடு, ஆகியவைகளைப்பற்றி எழுதுவதாகக் குறிக்கப்பட்டிருந்தோம். அதோடு இந்த வாரம் சென்னையில் திரு. எ. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கக்ஷியைச்சேர்ந்த முக்கிய தலைவரான திரு. சாமி. வெங்கடாசலம் செட்டியார் சீர்திருத்த சம்பந்தமாகவும் சுயமரியாதை மகாநாட்டுத்தீர்மானங்கள் சம்மந்தமாகவும் தமது அபிப்பிராயத்தை ஒரு உபன்யாச மூலமாகத் தெரிவித்திருக்கின்றார்.

அதுவும் ஏறக்குறைய பார்ப்பனர்கள் மகாநாடு, வருணாசிரம மகாநாடு, சைவப்பெரியார் மகாநாடுகள் போன்றவைகளின் அபிப்பிராயத்தையே வர்த்தக யுக்திமுறையில் பேசியிருக்கின்றார். அதன்சாரமும் அதற்கு திரு. எ. ராமசாமி முதலியார் அவர்களின் விளக்கமான சமாதானமும் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

திரு. சாமி. வெங்கிடாசலமவர்கள் வௌவாலைப்போல் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளவேண்டும் என்னும் முறையில் எவ்வளவோ சாமர்த்தியமாகப் பேசியிருந்தாலும் தன்னைப்பொறுத்தவரை தான் சூத்திரன் அல்லவென்ற எண்ணத்தினால் வருணாச்சிரமத்தைக் காப்பாற்ற எண்ணி அதை மக்களிடம் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

திரு. சாமி அவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்தை ஆதரித்தாலும் பார்ப்பனர்கள் திரு. சாமியையும் சூத்திரர்கள் என்பவர்களின் கணக்கில்தான் சேர்த்து வாழ்க்கையில் கோவில் ஓட்டல் முதலியவைகளில் சூத்திரன் மரியாதைதான் கொடுத்து வருகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. அன்றியும் திரு. சாமி வெங்கிடாசலம் அவர்களின் வருணம் என்பதான வைசிய வருணத்திற்கு வருணாசிரம தர்ம வியாக்யானமொன்றில் 'பிராமண ஆணும் க்ஷத்திரியப்பெண்ணும் சேர்ந்து பிறந்தபிள்ளை வைசியனாகின்றான்' என்று எழுதி இருப்பது தெரியுமா தெரியாதா? அல்லது தெரிந்தே வருணாசிரமத்தை ஆதரிக்கின்றாரா என்பது விளங்கவில்லை.

நிற்க. மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி முதலிய பார்ப்பன மகாநாடுகளில் அதன் தலைவர்கள் பேசியிருப்பதை பார்த்த பிறகாவது திரு. சாமி வெங்கிடாசலம் செட்டியாரவர்களுக்கு ஏதாவது மாறுதல் உண்டாகுமோ அல்லது பழைய எண்ணமேதான் இருக்குமோ என்பது குறிப்பிட முடியாதது. மேற்படி மகாநாட்டுத் தலைவர்கள் பேசி யிருப்பதின் சாரமாவது.—

### பிராமண மகாநாட்டு வரவேற்பு அக்கிராசனர் சொற்பொழிவுச் சாரம்.

மோட்சத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தை அப்யசிக்கின்றவர்கள் பிராமணர்கள். கிரேக்கர், பார்சி, டச்சு, போர்ச்சுகீசு, பிரஞ்சு மகமதியர் ஆகிய சம்மத துவேஷ ராஜாக்கள் காலத்திலும் இம்மாதிரி ஒரு மகாநாடு கூட்ட வேண்டிய அவசியமில்லாமல் நமதுமதம் நிலைநின்றிருக்கின்றது.

நாம் தினமும் செய்துவரும் பிரார்த்தனை பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் க்ஷேமம் உண்டாகவேண்டும், ராஜா (இதற்கேற்றபடி) நீதியாய் நடக்கவேண்டும் என்பவைகளாகும். இம்மாதிரி பிரார்த்தனை எந்த மதத்திலாவது உண்டா?

இப்பொழுது நாடார், சுயமரியாதைக்காரர், ஸ்திரீகள், விதவைகள் யுவர் யுவதிகள் முதலியவர்கள் சங்கங்கள் விருத்தி அடைந்து வருகிறது.

நமது அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) நம் மீது துவேஷங்கொள்ளுகின்றார்கள்.

இவைகள் எல்லாம் நாம் ஈடேற விடாமல் செய்யத்தக்கதல்லவா?

சூத்திரர்கள் அவர்களுடைய கடமைகளைக் கடந்ததால் பிராமணர்கள் சுய நலக்காரர்களாகவேண்டியதாயிற்று.

மத விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் சட்ட சபைகள் பிரவேசிக்கக்கூடாது (அவர்கள் யார்)

சதிகாப்பு, விதவா விவாகம், ஜாதி பேத விலக்கு, தர்மசொத்து ஆகியவைகளைப்பற்றி சட்டம் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

இன்னும் ருதுமதி, கல்யாண ரத்து, பெண்களுக்கு சொத்து உரிமை ஆகியவைகளுக்கும் சட்டம் வேண்டுமாம்.

தேவதாசிகளை [illegible]க்கவும் பாலிய விவாகத்தை தடுக்கவும் வந்து விட்டார்கள். இவைகள் எல்லாம் இந்து மதத்தையே வேரறுக்கச் செய்வதே தவிர இதனால் ஒரு பலனும் விளையாது.

(இவைகள் இந்து மதக்கொள்கையானால் இந்து மதமிருக்கவேண்டுமா?)

பெண்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி கற்பித்தல் கூடாது.

அப்படிச்செய்வதால் அவர்களும் ஆண்களாகி விடுகிறார்கள். பெண்களுக்கு குடும்ப காரியம் கற்பு புத்திராபிவிர்த்தி செய்வதற்கும் ராமாயண பாரதம் கற்பித்தல் ஆகியவைகளே போதுமானது.

சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்பதைப்பற்றியும் சூத்திரன், பஞ்சமன், என்று அழைப்பதைப் பற்றியும் ஆட்சேபித்து சிலர் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள்.

சூத்திரன் என்ற சொல் மிகப் பரிசுத்தமானது.

யாக எக்யாதிகளுக்கு சூத்திரன் அவசியமானவனாகிறான்.

பஞ்சமர், தீண்டாதார், என்று வித்தியாசப்படுத்திக்கொண்டு அப்படி ஒரு ஜாதி இருப்பதாய் வித்தியாசம் கற்பிப்பது கொடிதான காரியமாகும்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகியவர்கள் அவரவர்கள் கடமையிலிருந்து தவறும் போதுதான் பஞ்சமர்களாகின்றார்கள்.

அப்படி தன் வருண தருமத்திலிருந்து தவறினவன் மறுபடியும் அந்த வருணத்தை அடைய முடியாது.

தினமும் ஸ்நானம் செய்யாததினாலேயே தீண்டாதவர்களாகின்றார்கள், தீண்டாமையை விலக்க தீண்டாதவர்களே சம்மதிக்கமாட்டார்கள். ஏனென்றால் தீண்டாதவர்களிடம் உயர்குணமிருக்கிறது. உள்ளதுபோதும் என்று திருப்தியடைகின்றார்கள்.

### தலைவர் உபன்யாசத்தின் சாரம்.

துவேஷமும் தெய்வ தூஷணையும் ஏற்பட்டு விட்டதால் பிராமண சபை கூட்டவேண்டியதாயிற்று.

ஒவ்வொரு வருணத்தாரும் அவரவர்கள் தர்மப்படி நடந்தால் எல்லோரும் நன்மை யடையலாம்.

சூத்திரர்கள் வேதம் படிக்காததால் ஒன்றும் முழுகிப் போய் விடாது. அவர்களுக்கு புராணங்கள் இருக்கின்றது. சூத்திரன் என்கின்ற பதம் நல்ல பதம்.

ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தருமம் இருக்கின்றன. அது போல் இங்கும் அவனவன் தருமப்படி நடக்கவேண்டும். பிராமணர்களை அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) ஏன் தூஷிக்கவேண்டும். சூத்திரர்களில் நாயக்கர் வேளாளர் ஆகியவர்கள் எவ்வளவோ ஆசாரமாயிருக்கின்றார்கள்.

சூர்ப்பனகை எதிரில் வந்ததால் சீதை அக்கினி பிரவேசமாக நேர்ந்தது. ஸ்திரீகளை பத்திரமாக காப்பாற்ற வேண்டியது ஆண்கள் கடமை. ஸ்திரீகள் உத்தியோகத்திற்கு லாயக்கில்லை. மேலதிகாரிகளுக்கு என்னவெல்லாம் செய்யநேரிடுமோ?

எனவே, பிராமணன்தான் இந்துமதத்திற்கு ஆதாரமான தென்னும் வேதம்படிக்கலாம் என்பதும், தாங்கள் தான் பிராமணர் என்பதும், இந்துமத தத்துவப்படி மற்றவர்களை சூத்திரர்கள் என்பதும், வெகு காலமாக அநேக இந்து மகமதிய ராஜாக்கள் காலத்தில் கூட தாங்கள் அவர்களை ஏமாற்றி தங்களது ஆதிக்கங்களை நிலைநிறுத்தி வந்திருப்பதும், பிராமணனும் அவனது ஆகாரத்திற்கு மாடுகளும் க்ஷேமமாக இருந்தால்போதும மற்ற

வர்கள் எக்கேடு கேட்டாலும் கவலை இல்லை என்பதும், இதை நிலைநிறுத்தத்தக்கவன்தான் அரசனாக இருக்கவேண்டுமென்பதும், நாடார்முதலிய சமூக மகாநாடுகளும் சுயமரியாதை மகாநாடுகளும் தங்கள் ஆஸ்திகத்திற்கு விரோதமானவை என்பதாகக்கருதி இருக்கின்றார்கள் என்பதும், சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாயிருக்கவேண்டியதும் சூத்திரப்பெண்கள் அவர்களுக்கு தாசிகளாயிருக்கவேண்டியதுமான சூத்திர தர்மம் தவறினதாலேயே பிராமணர்கள் சுயநலக்காரர்களாக இருக்கின்றார் என்று சொல்லுவதன்மூலம் பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்கு சமாதானம் சொல்லுவதும், 'சமத்துவம் இருக்கக்கூடாது, தர்மசொத்துக்களின் கணக்கு கேட்கக்கூடாது, குழந்தைப்பெண்களுக்கு கல்யாணம் செய்யவேண்டும், பெண்களுக்கு சொத்துக்கள் இருக்கக்கூடாது, படிப்புகூடாது, சுதந்திரம் கூடாது, தாசிகள் இருக்கவேண்டும், விதவைகள் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது' என்பது, போன்ற கொள்கைகளே இந்துமதம் என்பதும், மேல்கண்ட கொள்கைளில் எதை திருத்துவதானாலும் இந்துமதத்தை அழித்ததாகுமாதலால் சர்க்கார் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதும், பெண்கள் வீட்டு வேலை செய்வதும் பிள்ளை பெறுவதும் தவிர வேறு உரிமைக்கு லாயக்கில்லை என்பதும், கற்பு பெண்களுக்கு மாத்திரமே ஒழிய ஆண்கள் விஷயத்தில் கவலை இல்லை என்பதும், ராமாயணம் பாரதம் ஆகியவைகளே தர்மத்திற்கு ஆதாரமானதென்பதும், சூத்திரன், பஞ்சமன், என்று அழைப்பதுமிகவும் சரியானதென்பதும், அவை அவர்களுக்கு மிகவும் மேன்மையானதென்பதும் சூத்திரன் என்ற சொல் மிகவும் பரிசுத்தமானதென்பதும், பிராமணர்களின் யாகத்திற்கு பயன்படவே சூத்திரன் இருக்கின்றான் என்பதும் சூத்திரன் அவனுக்குள்ள கடமையைச் செய்யாததால் பஞ்சமனாக வேண்டியதாகின்றதென்பதும் தினமும் ஸ்நானம் செய்யாததால் தீண்டாதவர்களானார்கள் என்பதும், தீண்டாதவர்கள் அப்படியே இருக்க விரும்புவது தான் உயர்குணமென்பதும், சூத்திரர்கள் புராணங்கள் படித்து அதன்படி நடத்தலே அவர்கள் வேதம் படித்ததற்கு சமானமென்பதும், வேளாளர்கள் நாயக்கர் முதலியவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்பதும் ஆகிய விஷயங்கள் வியக்தமாகவும் நன்றாகவும் பொருள் படும்படி பேசி இருக்கின்றார்கள் இதற்கேற்ற தீர்மானங்களும் செய்திருக்கிறார்கள்.

சைவமத சைவப்பெரியார் மகாநாடு, தீண்டாதவர்களுக்கு தனிக் கோவில் கட்டிக்கொடுப்பதன்மூலம் தீண்டாமையை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றது, வருணாசிரமமகாநாடும் பிராமணமகாநாடும் ஒரே அடியாய் இருக்கின்றபடியே இருக்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டன. இதிலிருந்து வாசகர்களை நாம் ஒன்று கேட்கின்றோம்.

அதாவது மேற்கண்ட கொள்கைகளையுடைய இந்து மதமும் அதற்கு ஏற்ற கடவுள்களும் சைவமதமும் அதற்கு ஏற்ற சிவனும் இருக்க வேண்டுமா அல்லது அவற்றைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டுமா என்பதேயாகும். 'இது வரை எந்த ஆஸ்திக சிகாமணியும் தேசிய வீரர்களும் மேற்கண்ட இந்துமத ஆதாரத்தையும் சைவசமய ஆதாரத்தையும் மறுத்துப் பேசவோ வேறு ஆதாரம் காட்டவோ சிறிதாவது முற்பட்டவால்ல. ஆனால் "இந்து மதத்தையும் வேதத்தையும் ஆகமத்தையும் தர்மத்தையும் புராணங்களையும் காப்பாற்ற மாத்திரம் வரிந்து கட்டிக்கொண்டு முன் வந்திருக்கின்றார்கள்.

சிலர் தங்களை சூத்திரன் என்று சொல்லிக் கொள்ளப் போவதாகவும் தாங்கள் உண்மையிலேயே சூத்திரர்கள் தான் என்றும் அதிலும் சற்சூத்திரர்கள் என்றும் சொல்லி ஆனந்தப்படுகிறார்களாம். பார்ப்பன செல்வாக்கும் அவர்களது பணமும் நமது மக்களை என்ன வேண்டுமானாலும் செய்யத்தக்க வலுவுடையதாக இருக்கின்றது என்பதை நாம் சுலபத்தில் மறக்க முடியாதவர்களாயிருக்கின்றோம். பார்ப்பனரல்லாத மக்கள் பலருக்கு சுயமரியாதை மகாநாடு விஷயமாய் இருக்கும் ஆத்திரத்தில், அதிருப்தியில் ஒரு பங்கு கூட இந்த வருணாசிரம மகாநாட்டிலும் பிராமண மகாநாட்டிலும் ஏற்படாதிருப்பதற்கு நமக்கு காரணமே விளங்கவில்லை. எப்படியானபோதிலும் இந்த மகாநாடுகளும் எதிர்ப்பிரசாரங்களும் நமது கொள்கைகளையும் உத்தேசங்களையும் முயற்சிகளையும் உறுதிப்படுத்துகின்றதே தவிர சற்றுவது தளர்ச்சியாக்கவில்லை என்பதையும் நமது வாலிபர்கள் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட மதங்களையும் சாமிகளையும் ஒழிக்கத் தயாராயிருக்க வேண்டியது தான் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## இந்தியாவில் எப்படி பார்ப்பனீயம் நிலைத்திருக்கின்றது.

உலகம் முழுவதும் விழிப்படைந்து முன்னேறிக்கொண்டிருக்கிற காலத்தில், குறிப்பாக எல்லா சமூகத்தைவிட மத சம்மந்தமான பிடிவாதத்தில் இணையற்ற மகம்மதிய அரசர்கள் ஆட்சி செய்யும் நாடுகளும்கூட அரசுரிமையை இழந்தாவது சீர்திருத்தத்தைப் பரப்பவேண்டும் என்று முயற்சித்துக்கொண்டிருக்கும் அரசர்களுக்கும் கட்டுப்பட்டு நடந்துவரும் இக்காலத்தில் இந்தியா மாத்திரம் ஒரு கடுகளவுகூட தன் நிலையை விட்டு அசையாமல் இருக்கக் காரணம் என்னவென்பதை மக்கள் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

நிற்க பொதுவாக உலக மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சகோதர பாவம் கொள்ளுவதற்கு உலகத்தில் முதல் தடையாயிருந்தது-இருப்பது-மதங்கள் என்று சொல்லப்படுபவைகளேயாகும், இரண்டாவது அதன் உட்பிரிவுகள் ஆகும். மூன்றாவது பாஷைகள் ஆகும். இதை அனுசரித்து இடவித்தியாசங்களுமாகும். உதாரணமாக பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், இந்துக்கள் என்பனபோன்ற மதப்பிரிவுகள் உலகத்தில் இல்லாமலிருந்தால் மக்கள் சமூகத்தை பெரும்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்காட்டவும் ஒரு நாட்டாருடைய சுகதுக்கங்கள் மற்ற நாட்டார்களுக்கு சம்மந்தமில்லாமலிருக்கவுமுள்ளதான நிலை உலகத்தில் இருக்கவே முடியாது என்னலாம்.

வேண்டுமானால் ஒரு சமயம் தேசத்தின் பேரால் மக்களைப் பிரித்துக்காட்டவேண்டியதாக ஏதாவது ஏற்பட்டால் ஏற்படலாம். அப்படிக்கு இருந்தாலும் ருஷ்யருக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் உள்ள பிரிவுகள் போன்ற பிரிவுகளும் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் உள்ள வித்தியாசம் போன்ற பிரிவுகளும் போல இருக்குமே ஒழிய எந்தக்காரணத்தைக்கொண்டும் ஒற்றுமைப்பட முடியாததும் ஒரு தேசத்தையோ ஒரு சமூகத்தையோ அடியோடு கொன்று ஒரு தேசத்தார் வாழத்துணியும்படியான பிரிவுகளாகவும் மற்றவர்களைப் பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளாமல் தங்கள் தங்கள் சமூக நன்மையை மாத்திரம் கவனிக்கக்கூடிய பிரிவுகளாகவும் ஒருவருக்கொருவர் நடை உடை பாவனை பழக்க வழக்கம் முதலியவைகளால் வெறுப்புக் கொள்ளும் பிரிவுகளாகவும் பிரிந்திருக்க முடியவே முடியாது என்பது நமது உறுதியாகும். கிறிஸ்தவர்களுக்குள் பலபிரிவுகள் இருந்தபோதிலும் மதம் என்கின்ற ஒரு காரணத்தால் ஒன்றுபட்டு உலகத்தில் உள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்தியாவின் ஆதிக்க முதலிய விஷயங்களில் எதிரிகளாகவே இருந்து இந்தியாவை உறிஞ்சிவருகின்றார்கள் என்பதை தினமும் உணருகின்றோம். அதுபோலவே உலகத்திலுள்ள எல்லா மகமதியர்களும் தங்கள் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தங்களது நன்மையைக் குறிக்கொள்ளும்போது இந்துக்கள் என்பவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரிடையாய் இருக்க நேர்ந்தாலும் சிறிதும் அபிப்பிராய பேதமில்லாமல் ஒன்று சேருகின்றார்கள்.

அதுபோலவே இந்துக்கள் என்பவர்களும் மதவிஷயங்கள் என்பவைகளில் மகமதியர்கள் கிறிஸ்தவர்கள் என்பவர்களுக்கு எதிராக ஒன்றுசேர முடியாதவர்களாயிருந்தாலும்கூட ஒன்றுசேர வேண்டும் என்கின்ற உணர்ச்சிகளை எளிதில் அடைவதன்மூலம் எதிரிகளாக கருதத்தக்கவர்களாகி விடுகின்றார்கள்.

இது சரியா தப்பா அல்லது இதற்கு ஏதாவது பொருள் உண்டா என்பவைகள் ஒருபுறமிருந்தாலும் முக்கியமாய் மதத்தின் பலனாய் வேற்றுமை உணர்ச்சிகள் தோன்றியே தீருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படியெல்லாம் இருந்தாலும்கூட மேல்நாட்டில் உள்ள ஒவ்வொரு மதக்காரர்களும் சமீபகாலமாய் தங்கள் பிடிவாத குணங்களைவிட்டு முதலில் தங்களுக்குள் ஒன்று படுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு அம்முயற்சிக்கு எதிரிடையாய்

இருப்பவைகளைத் தகர்த்தெறிந்து ஒரே சமூகமாக ஆவதற்கு மிக முனைந்து வருகின்றார்கள் இம்முயற்சிக்கு விரோதமாக மதத்தின் பேராலும் தெய்வத்தின் பேராலும் இருக்கும் தடைகளைக்கூட வெகு சுலபத்தில் தகர்த்தெறியத் துணிந்து வருகிறார்கள்.

உதாரணமாக இம்முயற்சியில் சிறிதளவாவது முதலில் வழிகாட்டின பெருமை மேல் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கே உண்டு என்று சொல்லவேண்டும். ஏனெனில் அவர்கள் தான் முதன்முதலாக நிலைமைக்குத் தக்கபடி தங்களை சரிப்படுத்திக்கொள்ள முன் வந்தவர்கள். உதாரணமாக அவர்கள் வேதம் என்று சொல்லப்படும் பைபிளைக்கூட திருத்த முயன்று பழைய ஏற்பாட்டிற்கு விரோதமாய் புதிய ஏற்பாட்டை உண்டாக்கி நடை உடை முதலியவைகளையும் மாற்றிக்கொண்டார்கள். அதுபோலவே இரண்டாவதாக மகமதியர்களையும் சொல்லலாம். ஏனெனில் அவர்களிலும் இந்துக்கள் என்பவர்களைப் போல் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது போன்ற சில கடுமையான பிரிவினை வித்தியாசங்கள் இல்லாவிட்டாலும் வாழ்க்கையில் மகமதியர்களையும் மதம் என்பது இந்துக்கள் என்பவர்களைப் போலவே அநேக விதங்களில் கட்டுப்படுத்தி வந்திருக்கின்றது என்று சொல்லலாம். உதாரணமாக நடை உடை பாவனை முதலாகிய பலவற்றுள் மதங்களின் பேரால் கட்டுப்பட்டுக் கிடந்தாலும் இப்போது தைரியமாய் அக்கட்டுப்பாடுகளில் சிலவற்றையாவது தளர்த்திவிட ஆரம்பித்து விட்டார்கள். அதுமாத்திரமல்லாமல் வெகு துரிதமாகவும் தைரியமாகவும் சிலர் மாற்றிக் கொள்ளவும் ஆரம்பித்து விட்டார்கள் அந்தபடிக்கு மாற்றிய மகமதிய வீரர்களான அமீருக்கும் பாக்ஷாவுக்கும் ஆதரவு கொடுக்கவும் முந்துகின்றார்கள்,

மற்றும் வெளி நாடுகளில் அந்தந்த தேசக் குடி ஜனங்கள் பெரும்பாலோர் அத்திருத்தங்களுக்கு தாராளமாய் ஆதரவளித்துப் பின் பற்றி வருவதில் யாதொரு தடையும் காணமுடியவில்லை. ஆனால் புரோகிதக் கூட்டத்தின் தொல்லைகள் மாத்திரம் எந்த மதத்திலும் சிறிதளவாவது இல்லாமலிருக்கும் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும் அவர்களிலும் சிலர் தம் சுயநலத்திற்கு வலியுறுத்துவதை தவிர வேறு காரணங்கள் சொல்லவோ ஆதாரங்கள் காட்டவோ முடியாதபடி மக்கள் அறிவு பெற்று விட்டார்கள். இந்தியாவில் உள்ள மகமதிய சமூகமும் இந்தியர்களுடன் பழகுவதால் கமால் பாக்ஷாவுக்கும் அமீருக்கும் விரோதமாக அதிருப்தியும் ஆத்திரமும் காட்டுவதன் மூலம் ஒரு புறத்தில் தங்கள் மதப்பற்றை காட்டிக் கொண்டாலும் மற்றொரு புறம் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து அவர்களுக்கு ஆதரவளித்தே வருகின்றார்கள். உதாரணமாக அமீரையும் அவரது மனைவியையும் இந்திய மகமதியர்களில் சிலர் குறை கூறி இருந்தாலும் அமீரினது ஆட்சிக்கு ஆபத்து வந்து விட்டது என்று தெரிந்தவுடன் அவருக்கு இந்தியாவில் உள்ள மவுலானாக்கள் முதல் கொண்டு அனுதாபப்படுவதுடன் ஆதரவளிக்கவும் முந்துகின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதன் காரணம் என்னவென்று பார்ப்போமானால் கூடுமானவரை அந்த சமூக நன்மை சம்மந்தமான கவலையும் ஒற்றுமையுமேயாகும். ஆனால் இந்துக்கள் என்பவர்களுக்குள் அம்மாதிரியான சமூக ஒற்றுமை இல்லாமல் எவ்வித திருத்தங்களுக்கும் எதிர்ப்புகள் இருந்து வருவதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் இதிலுள்ள மதப்பிரிவுகளோடு அவைகளிலுள்ள உட் பிரிவுகளும் ஜாதிப் பிரிவுகளும் அவற்றில் உள்ள உயர்வு தாழ்வுகளும் அதனால் சிலருக்கு ஏற்படும் நிரந்தர நலமுமே காரணமாகும். இந்த உள் பிரிவுகளும் ஜாதிப்பிரிவுகளும் நிலைத்து முரட்டு பிடிவாதமாய் இருப்பதற்கு காரணம் என்னவென்று பார்ப்போமானால் மற்ற மதங்களைவிட இந்துக்கள், இந்து மதம், என்பனவற்றில் அதிகமான நிர்ப்பந்தங்கள் இருந்து வருகின்றது என்பதேயாகும்.

அவையாவன:— முதலாவது இந்துக்களுடைய மதக் கொள்கைகளின்படி மக்கள் படிக்கக்கூடாது. ஆனால் ஒரு சிறு வகுப்பினர்-பார்ப்பனர்கள்-என்பவர்கள் மாத்திரம் தான் படிக்க உரிமையுள்ளவர்கள். மதஆதாரம் என்பதைப்பற்றி இந்து மதத்தைச்சேர்ந்த மக்களே தெரிந்து கொள்ளக்கூடாது மத சம்மந்தமான எந்த விஷயங்களிலும் பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்கள் என்று ஏற்பாடு செய்து கொண்ட ஒரு சிறு வகுப்பார்—அதாவது 100-க்கு 2 பேர்களான பார்ப்பனர்கள்—தவிர மற்றவர்களுக்கு சொந்த அறிவை உபயோகிக்கவோ ஆராய்ச்சி செய்யவோ நன்மை தீமை எவை அவசியமானவை எவை அவசியமில்லாதவை எவை என்று தெரியவோ சற்றும் உரிமை கிடையாது.

'படிப்பு, மத, சம்பந்தம் ஆகியவைகளில் இம்மாதிரியான நிர்ப்பந்தம் இருப்பதோடு மாத்திரமல்லாமல், மனித வாழ்க்கையிலும் மக்களை தனித்தனி ஜாதிகளாகப்பிரித்ததோடல்லாமல், அவற்றில் உயர்வு தாழ்வும் ஒருவரை ஒருவர் தொடாமல் நெருங்காமல் காண முடியாமல் செய்வித்து ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பிறவித் தொழிலையும் ஏற்படுத்தி அவைகளையேதான் அவ்வவ் வகுப்பைச் சேர்ந்தவன் செய்து தீரவேண்டும் என்றும் அந்தப்படி அரசன் சட்டப, தண்டனை கண்டனை ஆகியவைகள் மூலம் செய்விக்க வேண்டும் என்றும் அரசர்களாலும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு விட்டது.

ஒரு சிறு கூட்டத்தார் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கபடி, தங்கள் வாழ்வுக்கு தேவையானபடி, நிரந்தரமாய் பொருள் வருவாய் இருக்கத் தக்கதாக பதினாயிரக்கணக்கான கடவுள்களை சிருஷ்டித்து ஆயிரக்கணக்கான சடங்குகளையும் சிருஷ்டித்து அவற்றிற்கு தினப்படி பூஜை, உற்சவம், கல்யாணம், அவைகளின் திருப்திக்கு என்று அச்சிறு கூட்டத்தாருக்கு வேண்டியவைகளையெல்லாம் அவசியமாக்கி அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுக்க வேண்டுமென்றும் அச்சிறு கூட்டத்தாரின் திருப்தியே கடவுள் திருப்தி என்றும் மற்ற மக்கள் பிறந்ததே அச்சிறு கூட்டத்திற்குத் தொண்டு செய்வதற்கென்றும் பலவாறாகக்கற்பித்து அக்கட்டுப்பாடுகளிலிருந்து யாராவது விலகவோ அல்லது அக்கட்டுப்பாடுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவோ புறப்பட்டால் அவ்வாராய்ச்சி செய்வது மகாபாதகமானதென்றும் நாஸ்திகமென்றும் அப்படிப்பட்ட நாஸ்திகனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் மற்றும் இது போன்ற பல நிர்ப்பந்தங்களையும் உண்டாக்கி வைத்திருக்கின்றார்கள்.

இது மாத்திரமல்லாமல் யாராவது துணிந்து இக்கட்டுப்பாட்டையும் கொடுமையையும் உடைக்கப் புறப்பட்டால் அவர்களை அசுரர்கள், ராக்ஷதர்கள், துஷ்டர்கள், தேவர்களுக்கு விரோதி, கடவுளுக்கு விரோதி, உலகத்திற்கு ஆபத்தை விளைவிப்பவன் என்பதான விஷமப் பிரசாரத்தால் அவனை அடியோடு அழித்து வந்திருக்கின்றார்கள். இன்றைய தினமும் மேல்கண்ட கொள்கைகளை மதக்கொள்கைகளாகவும் அவைகளைக் கொண்ட புஸ்தகங்களே மத ஆதாரங்களாகவும் அவைகளை நிலைநிறுத்தச் செய்வதே சீர்திருத்தங்களாகவும் இருந்து வருகின்றன.

உதாரணமாக இதுசமயம் நாட்டில் ஏற்பட்ட ஒரு புது உணர்ச்சியும் கிளர்ச்சியுமானது மக்களை எவ்வளவோ தூரம் நடை உடை ஆச்சாரம் போகப் போக்கியம் முதலியவைகளில் பழய கொள்கைகளையும், பழய அனுபவங்களையும் மாற்றிக்கொள்ள அவசியமும் இடமும் ஏற்படுத்திக்கொடுத்து அனுபவத்திலும் தலைசிறந்து விளங்கிக்கொண்டிருந்தும், தனது சொந்த சுயநலம்மாத்திரம் எவ்வளவு அறிவீனமும் ஆணவமும் இழிவும் பொருத்தியதாக இருந்த போதிலும் அதிலிருந்து சற்றாவது மாறுபடுவதோ தளர்த்தப்படுவதோ என்பது சிறிதும் முடியாததாகவே இருக்கின்றது.

உதாரணமாக மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஜாதி வித்தியாசத்தை நமது இந்திய நாட்டில் உள்ள அறிவாளிகள், பிரமுகர்கள், தலைவர்கள், பெரியோர்கள் இந்திய நாட்டில் உள்ள பொது இயக்கங்கள் சமய தத்துவங்கள் என்பவைகள் எல்லாம் அநேகமாய் ஒரே முகமாக விலக்கவேண்டும் என்று ஒழிக்க வேண்டும் என்றும் அந்தப்படி ஒழிக்காவிட்டால் நாட்டிற்கு சுதந்திரமில்லை, தேசத்திற்கு சுயமரியாதை இல்லை, சமயத்திற்கு மதிப்பு இல்லை என்று பலவாறாக அபிப்பிராயம் கொடுத்தும் தர்மத்தின் பேராலும் மதத்தின் பேராலும் கூட்டங்கள் கூடி தங்களுக்கும் தங்கள் ஆஸ்திகத்திற்கும் தகுந்தபடியே தீர்மானங்கள் செய்து வருகிறார்கள்,

உதாரணமாக சமீபத்தில் பல இடங்களில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி வருணாசிரமத்தை உறுதிப்படுத்தி 'பார்ப்பனர் தவிர மற்றவர்கள் பார்ப்பனர்களின் வைப்பாட்டி மகன், பார்ப்பன சேவைக்காக கடவுளால் உண்டாக்கப்பட்டவர்கள்' என்கின்ற கருத்துக்களடங்கிய சூத்திரர்கள் என்பதை நிலைநிறுத்த முயற்

'சுயமரியாதைத் தொண்டன்'

## திறப்புவிழா.

9—4—29 தேதியில ஈரோட்டிற்குப் பக்கத்திலுள்ள பள்ளிபாளையத்தில் 'சுயமரியாதைத் தொண்டன்' என்னும் வாரப்பத்திரிகையின் திறப்பு விழா சேலம் ஜில்லா போர்டு தலைவர் திரு எஸ். எல்லப்பசெட்டியார் எம். எல். சி. அவர்கள் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கோவை ஜில்லா போர்டு தலைவர் திரு. சி. எஸ், இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் திறப்புவிழா நிகழ்த்தினார்கள்.

திருவாளர்கள் ஈ, வெ, ராமசாமி, செங்கற்பட்டு ஜில்லா போர்டு உபதலைவர் சி. ஜெயராம், 'திராவிடன்' ஆசிரியர் ஜே. எஸ். கண்ணப்பர், முதலாளி ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுத் சாஹிப், கந்தசாமி முதலியார், சிவானந்தம், சி. நடராஜன், எஸ். சி. லிங்கம், நாகை காளியப்பன், கிருத்திவாசன், ராவணதாஸ், பொன்னம்பலனார், குருசாமி முதலியவர்களும் ஈரோட்டிலிருந்தும் சுற்றுப்பக்க கிராமங்களிலிருந்தும் அநேகரும் விஜயம் செய்திருந்தார்கள். எல்லோருக்கும் விசேஷ சிற்றுண்டி வழங்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்ட பின்னர் கூட்டம் ஆரம்பமாயிற்று 'சுயமரியாதைத் தொண்டன்' காரியாலயத்தாரும் அவ்வூர் பொது நல சங்கத்தாரும் திருவாளர்கள் எஸ். எல்லப்ப செட்டியாரவர்கட்கும் சி எஸ், சி, ரத்தின சபாபதி முதலியாரவர்கட்கும் ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுத் சாஹிபு அவர்கட்கும் வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார்கள். திரு. சி. எஸ் இரத்தின சபாபதி முதலியாரவர்கள் விழா நிகழ்த்தும் போது 'சுயமரியாதைத் தொண்ட'னை போன்ற பத்திரிகைகளின் அவசியத்தைப் பற்றி தெளிவாகவும் அழகாகவும் பல உதாரணங்களுடன் பேசினார்கள். திரு. ஜே. எஸ் கண்ணப்பரவர்கள் பத்திரிகைகளால் மேனாட்டார் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைப் பற்றி விளக்கிப்பேசினார்கள். பின்னர் திரு. ஈ, வெ. இராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி விளக்கியதோடு பத்திரிகைகள் ஒவ்வொரு கிராமத்திலும் பரவவேண்டும் என்றும் இல்லாவிடில் நாடு முன்னேற்றம் அடையாதென்றும் பத்திரிகை படிப்பதற்கு கல்வி அவசியம் என்றும் அக்கல்வியை மக்களுக்குப் பரப்பும்படியான பொறுப்பும் சௌகரியமும் ஜில்லா போர்டு தலைவர்களுக்கு உண்டு என்றும் எல்லோரும் 'சுயமரியாதைத்தொண்டனை' ஆதரிக்கவேண்டுமென்றும் கூறினார்கள்.

பின்னர் தலைவர் தமது முடிவுரையில் 'சுயமரியாதை' தத்துவத்தை அநுபவ வாயிலாக விளக்கிக் காட்டினார். அதாவது கோவில்களில் ஒரு வகுப்பாரே ஆதிக்கம் வகித்து எல்லாருக்கும் முன்னர் நின்றுகொண்டு கடவுள் தெரிசனத்துக்குத் தடை செய்கின்றனர் என்றும் விபூதி வழங்குவதிலும் நமது சுயமரியாதைக்குப் பங்கமான முறையில் நடக்கும் வழக்கம் இருந்து வருகிறது என்றும், ராமேஸ்வரத்தில் நாகப்பிரதிஷ்டை போன்ற பொருளற்ற விஷயங்களில் மக்கள் கொண்டு போன பொருளை எல்லாம் பறித்துக்கொள்ளுவது மாத்திரமல்லாமல் நகைகளையும் அடகு வைத்து விட்டு வரும்படியான நிலைமையைச் செய்து விடுகின்றனர் என்றும், ரயில்வே ஸ்டேஷன் காபி கிளப்பு முதலிய பொது இடங்களிலும் நமது சுயமரியாதைக்குக் குறைவான அம்சங்கள் நிறைந்திருக்கின்றன வென்றும் இவற்றையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்றும் இவற்றிற்கெல்லாம் ஜாதி வேற்றுமைதான காரணம் என்றும் இதையொழிக்க எல்லாரும் உழைக்கவேண்டும் என்றும் சுயமரியாதைத்தொண்டனைப் போன்ற பல பத்திரிகைகள் தோன்றவேண்டும் என்றும் கூறினார். தலைவருக்கும் விஜயம் செய்திருந்தவர்கட்கும் நன்றி கூறப்பட்டவுடன் இரவு 8 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

சித்திருப்பதும் சைவர்கள் என்பவர்கள் ஒன்று கூடி தீண்டாமை என்பதை நிலை நிறுத்தத்தக்க வண்ணமாக தீண்டாதவர்கள் என்பவர்களுக்கு தனிக்கோவில் கட்டிகொடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருப்பதும் போதுமான உதாரணமாகும்.

எனவே இந்தமாதிரி வருணாச்சிரம தர்மங்களும் இந்தமாதிரி சைவர்களும் நமது நாட்டில் உள்ளவரை எந்த விதத்தில் பார்ப்பனீயம் ஒழியமுடியும்? எந்த விதத்தில் சமத்துவம் உண்டாகும்? எந்த விதத்தில் மக்கள் ஒற்றுமைப்பட்டு மானத்துடன் வாழமுடியும்? என்பதை யோசித்தால் இந்தியாவை எப்படி பார்ப்பனீயம் நிலைத்து எந்தெந்தவழியில் நாட்டைப் பாழாக்கி வருகின்றது என்பது புலனாகும்.

எனவே இந்தியாவில் பார்ப்பனீயமற்ற மதமே இல்லையென்றும் இந்துமதமென்னும் நிலைப்பின்கீழ் எந்தமதமானாலும் சமயமானாலும் அகச்சமயமானாலும் அவற்றை எல்லாம் அடியோடு அழித்தாலல்லது மக்கள் கடவுள்நிலை என்பதையோ அன்புநிலை என்பதையோ ஒருக்காலமும் அடையமுடியாதென்றே சொல்லுவோம்.

---

## வியாபாரிகளுக்கு ஓர் அறிவிப்பு.

நாங்கள் அநேக வியாபாரிகளுக்கும் ஸ்டோர்களுக்கும் பல வருடங்களாக உயர்ந்த மஞ்சள், நல்லெண்ணை, துவரம் பருப்பு, எள்ளு, பனைவெல்லம் முதலிய சரக்குகள் சப்ளைசெய்து வருகிறோம்.

விரளிமஞ்சள் 1050 ரூபாய் எடைகொண்ட மணு 10க்கு ரூ. 32-8. உருண்டைமஞ்சள் ஷை மணு 10-க்கு ரூ. 29. கடலை எண்ணை டின் அடக்கம் 38 ராத்தல் ரூ. 6-12. எள்ளு பட்டணம் படி 56 கொண்ட மூட்டை 1-க்கு ரூ. 17. 100-க்கு 25 வீதம் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு 100க்கு ரூ. 1 வீதம் கமிஷனுக்கு சரக்குகள் வாங்கி யனுப்பப்படும்.

ரு. அ சுப்பிரமணிய செட்டி,
கமிஷன் மண்டி, ஈரோடு.

---

## தென் திருவிதாங்கூர் மருத்துவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

குலாபிமானிகளே!

தென்திருவாங்கூர் மருத்துவர் சங்கத்தை நிலைநாட்டி நான்கு வருடமாகியும் குல முன்னேற்றத்திற்கு அவசியமான கல்வி அறிவு ஒழுக்கங்களில சிறந்து சுயமரியாதை என்னும் ஞானசூரியனை பின்பற்றி நடப்பதற்கு உணர்ச்சியில்லாமல் பழயமூடப்பழக்க வழக்கங்களைக்கைக்கொண்டு, பிராமணர்களுக்கு அன்னதானம் கொடுப்பதும, திதி கர்மம் செய்வதும், பிராமணர் காலைக்கழுவிய நீரைக்குடிப்பதும், காய்ந்த தர்ப்பைப் புல்லுக்கு தெக்ஷணை கொடுப்பதும், பிராமணர்களைப்போல் நடிக்கும் சைவ குருக்களை வைத்து கலியாணங்கள் முடிப்பதும், தொட்டால் தீட்டு வந்துவிடுமென்று வைத்திருக்கும் கோயில்களுக்கு காணிக்கையிடுவதும் அக்கோயில் வெளிவாசலில் காத்து நின்று விபூதி சந்தனம் கெஞ்சிக்கேட்பதும், தன் ஜாதிக்குள்ளேயே தாழ்ந்த குலம் உயர்ந்த குலம் என்று வேற்றுமை காட்டிப் போராடுவதுமாய் இருக்கின்ற மருத்துவர்களே! உங்களுக்கு சுயமரியாதையில்லையா? சகோதரர்களே நமது குலத்திலிருக்கும் ஷை மூடக்கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் அகற்றி சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கைகளை மேற்கொண்டு அடிமையென்ற படுகுழியை விட்டு கரையேறும்படி வேண்டுகின்றேன். மருத்துவ அபிமானி.

---

## புரோகிதம் ஒழிந்த வைபவம்

உத்தம பாளையம் யூனியன் போர்டு மெம்பர் திரு. ப. தேவராஜ நாடாரவர்கள் தமது தாயார் இறந்த 11-ம் நாள் கருமாதி சடங்கை 5-4-29 தேதி புரோகிதமின்றி நடத்தி பந்து மித்திரர்களுக்கும் அநேக ஏழை ஜனங்களுக்கும் போஜனமளித்தார்.

---

அதிர்ஷ்டம்! அதிர்ஷ்டம்!!

சாலியர் மகாஜன சங்கம் க்ஷேமநிதி லாட்டரி.

சீட்டு 1க்கு ரூ. 1.

22 சீட்டுள்ள புக் 1-க்கு ரூ. 20.

## முதல் பிரைஸ் ரூ. 1000.

2வது பிரைஸ் ரூ. 500. 3வது பிரைஸ் ரூ. 250

மற்றும் பல சில்லரை பிரைஸ்களும் உண்டு.

2 புக் விற்பவர்களுக்கு தனிப்பிரைஸ் டிக்கட் 1

பிரைஸ் எடுக்கும் தேதி சுக்ல௵ வைகாசி-௴ 24-உ. (6—6—29)

ஷை தேதியில் சுண்டிப்பாய் பிரைஸ் எடுக்கக்கூடும். புஸ்தகம் விற்றவர்கள் சீக்கிரம் அனுப்பிவைக்கவும். கொஞ்சம் புத்தகங்களே மீதியிருப்பதால் தேவைக்கு எழுதவும்.

தகுந்த கமிஷன் தக்க லாபம்.

விலாசம்:—

உ. அ. சுந்தரமகாலிங்கம்,
K. P. K. சுப்பிரமணியம்,
காரியதரிசிகள்.
சாலியர் மகாஜன சங்கம் க்ஷேம நிதி
லாட்டரிக் கமிட்டி,
அருப்புக்கோட்டை, (இராமநாதபுரம் ஜில்லா.)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷிய பட்டங்களை நமது பெயர்களோடு சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. பெயர்களுக்குப் பட்டப்பெயரமைத்து மாணுக்கர்களை அழைத்தால் அவர்கள் அதிக சங்கோஜப் படுகிறார்கள். ஆனால் கொஞ்சநாள் கழிந்து, நம் பெயர்களோடு அந்த வால்கள் ஒட்டிக்கொண்டு விடுகின்றன. ஒரு நிலைக்கு வந்தவுடன் அப்பட்டங்களை நீக்கிவிட நாம் மறுக்கிறோம். இதெல்லாம் தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டிய அளவு முக்கியமான விஷயங்களாக நான் கருதவில்லை. ஆயினும் ஷை தீர்மானங்களை நிறைவேற்றியவர்களின் நோக்கம் எது என்றால், பட்டங்களைத் தாங்கி நின்றால் தலை போய் விடும் என்பதல்ல. ஆனால், இந்தப் பட்டங்கள், ஒருவரை யொருவர் நீக்கி வைக்கவும் பிரிவினை உணர்ச்சி தோன்றவும் வகுப்புக்களை விருத்தி செய்யவும் சாதிக்கொடுமைகளை வளர்க்கவும் ஏற்ற சாதனமாயிருக்கின்றன என்பதேயாகும். நான் அந்தத்தீர்மானத்தை ஒத்துக்கொள்ளாவிட்டாலுங்கூட அதன் முக்கியமான தத்துவம் அதாவது 'சாதிப்பட்டங்கள் இருக்கும் வரை சாதி வித்தியாசங்கள் இருந்தே தீரும், ஆகையால் அவை ஒழியவேண்டும்' என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

## கலியாண சம்பந்தமான தீர்மானங்கள்.

கனவான்களே! மற்ற இரண்டு தீர்மானங்களை எடுத்துக்கொள்ளுவோம். நான் அவற்றை முழுதும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் இவைபற்றித்தான் சற்று தெளிவான அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று நினைக்கிறேன். என் நண்பர் திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் புருஷர் பெண்ஜாதி ஆகியவர்கள் ஒருவருக்கொருவர் விவாக ரத்து செய்து கொள்ளுவது என்பதும் ஆலயப்பிரவேசம் என்பதும் ஆகிய இவ்விஷயங்களைக் குறித்து அதிகமாகச் சொன்னார்.

சாதாரணமாக கலியாணம் என்பது தெய்வீகம் பொருந்தியது என்னும் எண்ணம் நம் நாட்டில் எல்லோருடைய மனதிலும் பதிந்திருக்கிறது. ஆதலால் செய்யப்பட்ட கலியாணத்தை ரத்து செய்வது முடியாத காரியமாகத்தான் தோன்றும். இணக்க வயதுக் கமிட்டி அங்கத்தினருக நான் பல ஊர்களுக்குச் சென்றபோது இந்தச் சீர்திருத்தத்தைக் குறித்து சுயமரியாதை இயக்கத்தைச் சேராத அநேகர் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கலியாண சம்பந்தமான சீர்திருத்தம் கூடாது என்பது சரியல்ல. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்களின் கருத்து ஒருவனுக்குப்பன்னிரண்டு மனைவிகளிருக்கவேண்டுமென்பதல்ல, தற்கால இந்துலாப்படி பன்னிரண்டு மனைவிகளை ஒருவன் கலியாணஞ்செய்து கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை அவர்கள் தீர்மானித்த போது பெண்களின் உண்மையான நிலையை உணர்ந்தே தான் தீர்மானித்தார்கள். வாழ்க்கையில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டாலும் தற்கால "தெய்வீக மண"த்தினால் ஒரு பெண் தன் கணவன் காலடியிலேயே விழுந்து கிடக்க வேண்டியிருக்கிறது. தற்கால இந்து வழக்கப்படி கஷ்டமனுபவிக்கிறது பெண்களே. ஆண்களில் பலர் தம் மனைவிகளை ஈவு இரக்கமில்லாமல் அடிமையாக கருதித் துன்பப்படுத்தி, பகிரங்கமாக வேறொருத்தியைத் தன் ஆசைநாயகி யாக்கிக் கொண்டு அவர்கள் மனதைப்புண் படுத்துகிறார்கள். அன்றியும் அம்மனைவிகளின் பந்துக்களும் அடையும் துன்பத்திற்கோ அளவில்லை, அவர்கள் வடிக்கும் இரத்தக்கண்ணீர் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்ட பிறகு இரக்கசித்த முள்ளவர்கள்-தம்மைப்போல் பிறரையும் கருதும் பரந்த நோக்கமுள்ளவர்கள்-இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வாராமலிருக்க முடியுமா? மதத்தின் பேரால் உள்ள இந்த மகா கொடுமையை ஒழிக்க வழி தேடுவது தவறாகுமா? (கரகோஷம்) இதன் தத்துவம் என்னவென்றால் ஒழுக்கமில்லாமல் நடக்கும் மனிதன் ஒழுக்கமடைவதேயாகும். இந்து லாப்படி இதற்கு பரிகாரம் என்ன இருக்கிறது? ஒரே வீட்டில் நான்கு வைப்பாட்டியையும் ஒரு மனைவியையும் வைத்திருப்பது 'இந்து' லாப்படி கொடுமையாகாது. வைப்பாட்டி மக்களுக்கும் சொத்தில் உரிமை உண்டு. எவ்வளவு கொடுமையாக நடத்தப்பட்டாலும் எவ்வளவு இழிவாகப் பேசப்பட்டாலும் ஒரு பெண் தன் புருஷனைவிட்டு விலகிக்கொள்ள முடியவே முடியாது. நம்மைப்போன்ற ஒரு பிறவி ஏன் அப்படி யிருக்கவேண்டும்? இது போன்ற பல கொடுமைகளுக்கு காரணம் என்ன என்று ஆராய்ந்தால் ஆண்களுக்கு ஒரு ஒழுக்கம் பெண்களுக்கு வேறு ஒழுக்கம் என்பதாக நமது சமூகக் கொள்கை இருக்கிறது. இதை மறுக்க யாராலாவது முடியுமா? அந்தத் தீர்மானத்தை நான் முழுதும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் குரூரமான செயல்கள் கடுமையான சட்டங்களால் அடக்கப்படவேண்டியிருப்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதுபோலவே பெண்கள்படும் கொடுமையே இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்தவர்களின் நோக்கத்திற்கு ஆதாரமாகும். தனிப்பட்ட சில கொடுமைகளை ஒழிப்பதற்குச்சட்டம் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் நடைமுறையிலுள்ள கஷ்டங்களையும் நீக்க நாம் முயற்சிக்க வேண்டியதே. இந்தத் தீர்மானம் அது பெண்கள் நிலைமையைக்காப்பாற்ற நிறைவேறியதேயொழிய ஒழுக்கமில்லாமலிருக்கும் ஆண்களின் நிலைமையைக்காப்பாற்றுவதற்கல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

## கடவுளுக்குத் தரகன்

ஆலயப்பிரவேசசம்பந்தமாக இன்னும் பலமான எதிர்ப்புகள் ஏற்படுமென்று எதிர் பார்த்தேன். இந்தத் தீர்மானந்தான் மகேசருக்குள் மனோபேதத்தை உண்டுபண்ணி விட்டதோடு முக்கியமான மாறுபாட்ட அபிப்பிராயங்களையும் கிளப்பிவிட்டது. மகா உன்னதமான பரஞ்சோதியாகிய கடவுள் ஒன்று இல்லைஎன்று பொருள் படும்படியாக அந்தத் தீர்மானம் நிறைவேறியிருந்தால், நான் அதை எதிர்த்தே தீருவேன்.

எல்லா உயர்ந்த கௌரவமுள்ள இந்து குடும்பங்களிலும் மதம் ஏற்பட்டு வருகிறது. மதத்தைப்பற்றி அவசியமில்லை யென்றும், கடவுளுண்டு என்னும் நம்பிக்கையில்லை யென்றும், விக்கிரக ஆராதனை அனாவசியமென்றும் கருதினாலும் கருதலாம். ஆனாலும் தன் ஆயுட்காலமெல்லாம் கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை எனக்கில்லை என்று சொன்ன இந்து எவனையும் நான் இதுவரையில் கண்டதில்லை. கஷ்டப்படும் போதும் வியாதியாயிருக்கும் போதும் உங்கள் மனமானது மக்கள் மீது அருள் வெள்ளத்தைச்சொரிகின்ற அந்த ஜோதி சொரூபமான கடவுளை நாடிச் செல்லுகிறது.

எனவே என் நண்பர்கள் கடவுள் பெயரால் ஒரு பைசாகூடச் செலவு செய்யக் கூடாது என்னும் அத்தீர்மானத்தின் வாசகம் எப்படியிருந்தாலும் இருக்கட்டும். நம் பிரசங்கியார் இத்தீர்மானம் அமிதவாதம் பேசுகிறதென்று தங்களுக்குச் சொன்னார். ஆனால் கோவில்களின் பொருட்டு நாம் செலவு செய்யும் ஆயிரக்கணக்கான ரூபாய்களும் எங்கே போகின்றன என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். யாருடைய நன்மைக்காக யாரிடம் போய்ச் சேருகிறது? கடவுளிடமா? (சிரிப்பு) இப்பேர்ப்பட்ட விஷயங்களில்கூட நமக்கு சரித்திர சம்மந்தமான ஆதாரம் வேண்டுமா? (சிரிப்பு) 'கடவுளுக்கும் நமக்கும் தரகர் வேண்டாம், காலத்தையும் பொருளையும் தரகர்களுக்குச் செலவு செய்யவேண்டாம்' என்று தானே அந்தத்தீர்மானம் சொல்லுகிறது. அது அமிதமானதாகவா உங்களுக்குத் தோற்றுகிறது? கோவில் உற்சவம்முதலியவைகளால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களின் அளவுதான் இவ்வளவு அமிதமான சீர்திருத்தத்திற்கு ஆதாரமாயிருந்தது என்பதை உணருங்கள்.

எனவே இந்தத் தீர்மானங்களைப் போக்கத்தான் இப்பேர்ப்பட்ட ஒரு தீர்மானத்தை நிறை வேற்றினார்கள். இப்போது ஆஸ்திக சங்கங்கள் முளைக்கின்றன. (சிரிப்பு) அது தான் நமக்கு வேண்டியது. திருநெல்வேலி கண்விழித்துக் கொண்டது. கோவில்களைச் சீர்ப்படுத்த எல்லாரும் முயற்சி செய்கிறார்கள். சுயமரியாதை இயக்கமும் மகாநாடும் அரசியல் ஊழல்களையும், இந்து தர்மத்திலுள்ள சமுதாய மத ஊழல்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி விட்டதுடன் அவற்றை நிவர்த்திக்க முயற்சி செய்ய சிலர் உடனே புறப்படவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. தப்பிதமான வழியில் சமூகத்தை நடத்திப் போகின்றீர்கள் என்று அமிதவாதக்கொள்கையில்லாதவரைப் பார்த்து யாராவது சொன்னால், "என்ன முழுகிப் போய் விட்டது" ஏதோ ஒரு வழியில் அவர்கள் தங்கள் வேலையைச் செய்து விட்டார்கள். தூங்கி விழுந்து கொண்டு நீங்களிருக்கும் போது உங்களை மத ஆராய்ச்சி செய்யும்படி செய்து விட்டனர். அவசியமானல் சுயமரியாதை இயக்கத்தோடு போராட மத சம்மந்தமாகவும்,

## உறையூர்.
### சுயமரியாதைச் சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டம் ஒன்று 31-3-29-ம் நாள் ஞாயிறு மாலை 5 மணிக்கு வாலாஜா பஜாரிலுள்ள திரு. இலக்குமணன் அவர்கள் ஜவுளிக்கடையில் மேற்படியார் தலைமையில் கூடியது. உறுப்பினர்களில் அநேகர் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

1. திருச்சி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டை கோடை விடுமுறைக் காலத்தில் நடத்த வேண்டுமென்று இத்தாலூகா வாசிகளுக்குச் சிபார்சு செய்வதுடன், சீக்கிரத்தில் இதற்கெனவே ஓர் கூட்டம் கூடி அதில் வேண்டுவன செய்யவேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

(2) திருச்சி தாலூகாவிலுள்ள ஒவ்வோர் கிராமத்திலும் சுயமரியாதைச் சங்கங்களை நிறுவுமாறு திருச்சி ஜில்லா "சுயமரியாதை" ஈருருளி (சைக்கிள்) பிரசாரத் திருக்கூட்டத்தார்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(3) செங்கற்பட்டு மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை புத்தக ரூபமாகப் பதிப்பித்து அசல் விலை போட்டு கிராமங்களிலும் பரவும்படி செய்விக்க வேண்டுமென்று இக்கூட்டம் திரு ஈ. வெ. இராமசாமிப் பெரியாரவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

(4) செங்கற்பட்டு மகா நாட்டு வரவு செலவு கணக்குகளை வெளியிடுமாறு நிருவாகிகளைக் கேட்டுக் கொள்கிறது.

(5) பட்டுக்கோட்டையில் கூடப்போகும் தமிழ் மாகாண சுயமரியாதைத் தொண்டர் மகா நாட்டுக்கு தலைவர், வரவேற்புத் தலைவர், காரியதரிசி முதலானவர்களை தொண்டர் குழாத்திலிருந்தே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

---

சமூக சம்மந்தமாகவும் உங்களுக்குள்ள அபிப்பிராயங்களோடு வெளிவரும்படிக்கும் செய்துவிட்டனர். இந்த நிலைக்குக் காரணம் சுயமரியாதை மகாநாடுதான். ஆதலால் நாம் அதற்கு வந்தனம் செலுத்த வேண்டுமென்றும் நினைக்கிறேன்.

பழங்க வழக்கங்கள், சடங்குகள், தாகர்கள் முதலியவை மத சம்மந்தமுடையவையல்ல. அவற்றைக் களைந்து சரியான மதத்தைத் தெளிவு படுத்துவதையே இந்த மகாநாடு முக்கியமாகக் கொண்டது. அதன் தீர்மானங்களைப்பற்றி எவ்வளவு குற்றம் சொல்வதானாலும் அதன் நோக்கம் எப்படியிருந்த போதிலும், அது நம்மை விழிப்படையச் செய்யவும், நம் தற்கால நிலைமையை ஆராயும்படிச் செய்யவும், நம்மை முன்னைவிட அதிக மதப்பற்றுள்ளவர்களாக்கவும், நம் மதத்தைப்பற்றிக் கொண்டிருந்த களங்களை நீக்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பமாகக் கொள்ளவும், எல்லா மதங்களிலும் உன்னதமான மதமாக நம்மதத்தை ஆக்குவிக்கவும் செய்துவிட்டது என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

---

## சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றி திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களின் அபிப்பிராயம்.

செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கள் சம்மந்தமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ. அவர்களை நமது நிருபர் மதுரையில் பேட்டி கண்டு விசாரித்த போது அவர் செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில் சைமன் கமிஷனுக்கு வரவேற்பளிக்கும் தீர்மானத்தைத் தவிர மற்றவைகளனைத்தையும் முழுமனதுடன் ஆதரிப்பதாகவும் சட்டசபைக் கட்சியில் பார்ப்பனர்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளலாமென்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தார் சிபார்சு செய்ததை வரவேற்பதாகவும், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் உத்தியோகம் ஏற்றுக்கொள்வதை ஆக்ஷேபிப்பதாகவும் கூறினார்.

"திராவிடன்"

---

விருதுநகர் பிராமணரல்லாதார் இளைஞர் சங்கத்தின் ஆதரவில் 8-தேதி ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ. பேசுகையில், யுவர்களின் உபசாரத்திற்கு நன்றி பாராட்டி விட்டு, தாம் காங்கிரஸ் கட்சியில் பொறுப்பேற்ற பதவியை வகிக்கையில் சுயமரியாதை இயக்கத்துடன் சம்பந்தப்படும் காரணத்தை விளக்கினார். காங்கிரஸ் நோக்கத்திற்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் முரண்பாடான அபிப்பிராயமில்லையென்றும், இம்மாதிரி அபிப்பிராயத்திற்கு மாறுபடுவோர் உண்மை காங்கிரஸ்காரர்களில்லையென்றும், காங்கிரஸ் இயக்கம் சுயமரியாதைக்கு முரணானதென்று தன்னிடம் சொல்லப்பட்டவுடன் தாம் காங்கிரஸ் காரியதரிசி பதவியை ராஜிநாமாச்செய்வதாகத் தெரிவித்ததாகவும், சமூக வேற்றுமை யென்பது விசுவாமித்திரர் வசிட்டர் காலமுதல் ஆரம்பித்ததென்றும், அவ்வேற்றுமையை எப்படியாவது அகற்றவேண்டு

---

## நாடார் மகாஜன சங்கம் 13 வது மகா நாடு.

### உயர்திரு ஈ. வெ. இராமசாமியார் கொடி யேற்றுவார்.
### பிறையாறு.

நாடார் மகாஜன சங்கம் 13 வது மகாநாடு 1929 வருடம் ஏப்ரல் மாதம் 29, 30 மே மாதம் 1 ந் தேதிகளில் பிறையாற்றில் அமைந்திருக்கும் இரத்தின விலாசஸ் கொட்டகையில் நடைபெறும்.

சென்னை அரசாங்கத்தின் சட்ட அங்கத்தினர் திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் மகாநாட்டை திறந்து வைக்க மனமுவந்து சம்மதித்திருக்கிறார்கள்,

இராமநாதபுரம் ஜில்லா போர்டுதலைவரும் நமது சங்க காரியதரிசியுமான உயர்திரு ஊ. பு. அ. சௌந்திர பாண்டிய நாடார் அவர்கள் முதல் நாள் தலைமை வகிக்க சம்மதித்திருக்கிறார்கள். நமது குல முன்னேற்றத்திற்கு அவசியமான அரிய பெரிய விஷயங்கள் தீர்மானிக்கப்பெறும். அபிமானிகளனைவரும் விஜயஞ்செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மகாநாட்டிற்கு விஜயஞ்செய்யும் பிரதிநிதிகளின் போஜன வசதிக்காக அடியிற்கண்ட விகிதப்படி டிக்கட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| பிளாட் பாரம் | ரூ. 25 | போஜனத்துடன் |
| முதல் வகுப்பு | ரூ. 10 | ,, |
| 2 வது வகுப்பு | ரூ. 6 | ,, |
| 3 வது வகுப்பு | ரூ. 2 | போஜனமின்றி |
| விசிட்டர் | ரூ. 1 | ,, |

ச. நமசிவாய நாடார்,
பொதுக்காரியதரிசி

---

மென்றும், ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் வெற்றி பெறும் வரையில் தேசிய முன்னேற்றம் ஏற்படாதென்றும், அவருடைய இயக்கம் பிரஞ்சு தேசத்தில் முன்னாளில் நடந்த பெரிய இயக்கத்திற்கு சமானமாகுமென்றும் சொன்னார் என்று நமது நிருபர் எழுதுகிறார்.

"சு. மி."

---

வேதப்புரட்டை வெளியாக்கும்
"ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு
வெளிவந்து விட்டது.
முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0
ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனும், ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும். V. P. மூலம் அனுப்பினால் 14 அணா ஆகிறது.
திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் விலை அணா 0—4—0
சுயமரியாதைப்பாடல்கள் விலை அணா 0—2—0
விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.

பாரதமாதாவின் புத்திரிகள்

# நம் சகோதரிகளல்லரா?

திரு. P. குப்புசாமி எழுதியது.

எனக்குப் பெஜவாடாவில் ஓர் பார்ப்பனரல்லாதார் திருமண ஊர்வலத்தைக் கண்டதும் பரிதாபம் ஓர் பக்கமும் எங்கள் மதம்போச்சு, எங்கள் சாஸ்திரம்போச்சு, வருணாசிரம தர்மத்துக்கு அழிவுவராலாச்சு, எங்கள் பணவரும்படி போச்சுது, எங்கள் தலைவிதி "குடி அரசு" வந்து இப்படி யாச்சுது என்று கூக்குரலிடும் சில வைதீகர்களிடம் வெறுப்பு ஒருபக்கமும் உண்டாயிற்று

மணமகனும் மணமகளும் பல வர்ணமான பாசிகளால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் பல்லக்கில் ஏறி பான்டு, நாகசுர வாத்தியங்களுடன் ஊர்வலம் வந்தனர். பல்லக்கிற்கு முன்னால் பத்துமுதல் பதினெட்டு வயதிற்குட்பட்ட சுமார் பத்து அழகிய வாலிபதாசிச்சகோதரிகள் பாட்டுகள் பாடிக்கொண்டும்நடனம் புரிந்துகொண்டும் வந்தனர், அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் பணத்திற்காக தங்கள் மானத்தைத்துறந்து தங்கள் தொழில்புரிய உதவியாக இருக்கும் பலருடைய மனது குதூகலமடையும்வண்ணம் பலவிதமான அபிநயங்கள் செய்யுங்காலையில் அதுநோக்கும் விசாலபுத்திபடைத்த எவரும் வெட்கத்துடன் துக்கப்படாமலிருக்க முடியாது. இவ்வித இழிதொழிலும் இதுபோன்ற இன்னும்பல அட்டூழியங்களும் நடக்கவிடாமலும், நம் சொந்த சகோதரிகள்—பாரதசேய்கள் இத்தொழிலைவிட்டு நன்மார்க்கத்தையடையும்படியான புத்தியை அவர்களுக்கு கொடுக்கும்படியும், இத்தத்தொழில்செய்வதற்குஉதவியாக இருக்கும் சிலருக்கு நல்ல உணர்ச்சி உண்டாகும்படி செய்யவும் தீவிரபிரசாரம் செய்யவேண்டும்.

அச்சகோதரிகளைச் சுற்றிலும் பல வாலிப மாணவர்கள் நின்றுகொண்டு கேலியும் பரிகாசமும் செய்துகொண்டே வந்தனர். அப்பெண்கள் தமது சொந்த சகோதரிகளாயிற்றே ஒரு தாயான பாரத மாதாவின் அரும் புதல்விகளாயிற்றே அவர்கள் இத்தகைய இழிதொழில்புரிந்து வாழ்க்கை நடத்துவது நம்முடைய பாரத நாட்டுக்குத்தானே அவமானம் என்ற உணர்ச்சி இல்லாத அந்த வாலிபமாணவர்களின் அறியாமைகுறித்து எனக்குத் துக்கம் ஏற்பட்டது.

அந்த ஊர்வலம் பலபிரதான வீதிகளின் வழியே சென்றது. ஆனால் நான் பார்க்கும்படி நேரிட்டது அது ஒரு பார்ப்பன அக்கிரஹாரத்தின் வழியே சென்றுகொண்டிருந்தபொழுதே யாகும். அந்தாஸ்தாவின் இருபுறமுமுள்ள வீடுகளில் வசிக்கும் பார்ப்பனப் பெண்கள் எல்லோரும் வாசலில் நின்றுகொண்டு டை தாசி சகோதரிகள் பாடும் பாட்டுக்களைக்கேட்டும் அவர்கள் நடனம் புரிவதையும் அபிநயங்கள் செய்வதையும் பார்த்தும் சந்தோஷமடைந்தனர். தங்களைப் போன்ற பெண்மணிகள் இவ்வித இழிதொழிலைவிட்டுச் சீர்திருந்தும்படியான வழியைத்தேடக் கவலைப்படவேண்டிய அவர்கள் அக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்ததைப்பார்க்க நான் பெரிதும்வருந்தினேன். அவ்வூர்வலத்தை முதன்மையாக இருந்து நடத்துபவர் அந்தச் சகோதரிகளை எந்தெந்த வீட்டுவாசலில் பெண்கள் கும்பலாக இருந்தனரோ அந்தந்த இடங்களில் நிறுத்திப்பாடும்படியும் நடனம் புரியும்படியும்செய்துவந்தனர். இதில் இன்னும் ஓர் சம்பவம் குறிப்பிடற்பாலது. மணமகனின் சிநேகிதர்களில் சிலர் அத்தாசி சகோதரிகளில் ஒரு அழகிய மாதை அழைத்து அன்னார் கையில் ஏதோகொஞ்சம் பணங்கொடுத்து பல்லக்கில் வந்துகொண்டிருக்கும் மணமகனுக்கு பன்னீர்தெளிக்கும்படி. கேட்டு அச்சகோதரி அவ்விதம் செய்யவே எல்லோரும் அதைப்பார்த்து மகிழ்ந்தனர்.

ஊர்வலங்களில் இந்தவிதமான வாலிப சகோதரிகளை நடனம் புரியும்படி செய்ய எந்தச்சாஸ்திரம் இடங்கொடுக்கிறதோ அறியேன். இப்படிச்செய்வதில் அவர்கள் நோக்கம்தான் என்னவோ? இப்படிப்பட்ட சம்பவங்கள் நமதுவாலிப மாணவர்கள் கெடுவதற்கும் நம்முடைய இந்திய சமூகத்தை "மிஸ் மேயோ" போன்ற அன்னியர்இழிவுபடுத்துவதற்கும் சந்தர்ப்பங்களாக இருப்பதுமல்லாமல் இந்தத் தாசித்தொழிலுக்கு ஊக்கம் அளித்ததுமாகும். இதுமாதிரியாக இவ்வூரில் சாதாரணமாக அநேக ஊர்வலங்களில் நடந்துவருவதாகக் கேள்விப்படுகிறேன். இனியாகிலும் நம் சகோதரர்கள் விழித்துக்கொண்டு சீர்திருத்துவதோடு பார்ப்பனர்களில் வைதீகர் ஓர் சாரார் தாசித்தொழில் செய்வதற்கு தங்கள் சாஸ்திரக்குப்பைகளை கிளப்பி ஆதாரம் காட்டினாலும் அப்படிப்பட்ட சாஸ்திரங்களை தீயில் இட்டுக் கொளுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

### சாதிப்பட்டத்தையும் சமயக்குறிகளையும் துறந்தவர்கள்:-

திருவாளர்கள்:—

பி. கோவிந்தசாமி வர்த்தகம்,
காரைக்கால்.

வி. எஸ். ஆர். சுப்பைய்யா,
சௌடாம்பிகா வாசகசாலை
தேவாரப்பன்பட்டி.

கே. கிருஷ்ணன், உபாத்தியாயர்,
போர்டுஸ்கூல், செங்காத்துறை
சூலூர் போஸ்டு

பி. ஆர். கே. ரங்கசாமி
பட்டுக்கோட்டை.

ர. வெங்கடசாமி 24, வைக்கக்காரத் தெரு
தெற்குவாசல் மதுரை.

ஆர். கோவிந்தராஜுலு
13, வைக்கக்காரத் தெரு, மதுரை,

திருச்சினாப்பள்ளி திருவளர் சோலை:—

சோ. முத்துக்குமாரன், கா. முத்துக்கண்ணப்பர், அ. இராமஸ்வாமி, தெ வேலாயுதம், பி. அருணாஜலம். வை. மாரிமுத்து சி. ஆறுமுகம், க. சிதம்பரம், அ. அழகப்பர்.

பத்தாங்பெர் சுந்தை:—

எம். எ. ரங்கசாமி, ரா. வரதராஜுலு, ஆ. ராமலிங்கம், பொன்னன், மு. குமாரசாமி வ. அயிலு.கோ. அப்பய்யா, க. செ. க. கணபதி. தி. ராமசாமி, பி. ஞானமுத்து, ச. கிருஷ்ணன், சி. ராமையா, க. செ. பெருமாள், ஞானையா, தங்கையா, சுப்பையா, பெ. பொன்னையா, கா. பழனியாண்டி, ஆ. தம்பு சொ. குமாரசாமி.

# உண்மை வெளியாகுமா?

பூவாளூர் சைவ சித்தாந்த சங்கத்தின் 19வது ஆண்டு விழாவைப் பற்றியும் அங்கு நடந்த முழு விபரமான நிகழ்ச்சியைப்பற்றியும் "திராவிடன்" வாயிலாகத் தெரிந்திருக்கலாம். இன்றுவரை ஆண்டுவிழாத் தலைவர் அவர் சகாக்களாகிய உபந்யாசகர்கள் சமயப்பற்றுடைய ஆராய்ச்சியாளர்கள் பத்திரிகைகளுக்கு நிகழ்ச்சி எழுதிய காரியதரிசிகள், அவர் சொல்ல நான் எழுதினேன் என்று கூறும் "சேக்கிழார் வம்ச பாம்பரையில் தோன்றி ஓதாதுணர்ந்து" ஓலமிட்டுப் புலம்பும் பண்டிதரென்பவர் ஆகியவர்கள் ஆண்டுவிழாவில் நடந்துகொண்ட நேர்மையை அங்கு கூடியிருந்த பொது மக்கள்உணர்ந்திருப்பார்கள். காரியதரிசி போலும் நிருபர் போலும் உண்மைக்கு மாறான நிகழ்ச்சியைப் பிரசுரித்து விளம்பரப்படுத்திக்கொண்ட "நவசக்தி," "தமிழ்நாடு," "மித்திரன்," "தேசபந்து," "சிவநேசன்," "வீரசைவம்" போன்ற தினசரி, வார, மாதப்பத்திரிகைகளைப் பற்றியும் நமக்குக் கவலை இல்லை.

ஆனால் அவ்வாண்டு விழா நிகழ்ச்சியில் நடந்த உண்மை என்ன? அங்கு கேட்கப்பெற்றிருந்த கேள்விகளுக்கு பதில் விடுத்து மக்கள் பகுத்தறிவை பிரகாசிக்கச் செய்யாமல் வருடம் ஒருமுறை ஆண்டுவிழா நடத்தி நூற்றுக்கணக்கான ரூபாக்களை வீண்செலவு செய்து (கண்காட்சி வேடிக்கைபோல்) பண்டிதர், ஆராய்ச்சியாளர், நூலாசிரியர், பிரசங்கியார் என்று பொது மக்களிடம் வியாபார விளம்பரப்படுத்துவதைத் தவிர இவ்வாண்டு விழா வைபவத்தால் பெற்ற பயன் அதாவது சீர்திருத்தம் என்ன? என்பதையும், அன்று கேட்கப் பெற்றிருந்த துண்டுப் பிரசுரங்கள் இரண்டிலுமுள்ள கேள்விகளுக்குப் பதில் என்ன என்பதையும் பத்திரிகைவாயிலாக இனியேனும் தக்க பதில் கூற முன்வருவார்களா? காரியதரிசியார் பொறுப்பில்லாமல் பதட்டமுடைய பண்டிதர் அவ்விதம் எழுதிவிட்டார், இவ்விதம் எழுதிவிட்டார் என்று வெறும் வார்த்தை கூறிவிட்டு பத்திரிகையின் மூலமாக தாம் காரியதரிசி என்ற பெயரளவிலும், சிவபூஜை யளவிலும், சிவவேடஅளவிலும், பெருமையளவிலும் விளம்பரக் காரியதரிசியளவிலு மிருந்துவிட்டார். நடந்த உண்மை இன்னதென்று பத்திரிகை மூலம் இனியேனும் எழுதுவாரா? அல்லது ஒவ்வொரு வருடமும் சைவப் பெரியார் ஆண்டு விழாவை பேலீஸ் பந்தோபஸ்தோடும், கேள்வி கேட்கப்படாது என்ற போர்டோடும் இரண்டுநாள் சமாதானை முடிந்தபின் பொய்நிகழ்ச்சி எழுதிக்கொண்டிருக்கப் போகின்றாரா? என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன் என்று தில்லைநாயகம் எழுதுகிறார்.]

(5ம் பக்கத் தொடர்ச்சி.)

கட்டுங்கள்! தொழிற்சாலைகளை ஏற்படுத்துங்கள்! ஏழைமக்கள் விடுதிகள் உண்டாக்குங்கள் என்று கூறுகின்றோம். உங்களுக்கு மனச்சமாதானத்திற்காக, மன அமைதிக்காக கடவுள் என்னும் ஒன்றை வைத்துக்கொண்டு வணங்க வேண்டும் என்பீர்களானால் தடையின்றி வணங்குங்கள்! அதற்காகத் தாகர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டாம், அதற்காகச் செலவுசெய்யவேண்டாம். அதற்காக வெளிவேஷங்கள் வேண்டாம். உண்மைபன்புடன் இருங்கள். மனத்தைப்பரிசுத்தமாக்குங்கள். இரக்க சிந்தையுடன் இருங்கள், மற்றவரைத் தாழ்வாக நினைக்காதீர்கள். கொடுமைப்படுத்தாதீர்கள், ஏழைகளை நேசியுங்கள், உலகத்தின் துன்பத்தை உற்று நோக்கி அதற்கான நல்ல செயல்களை மேற்கொள்ளுங்கள் என்று தான் நாங்கள் கூறுகின்றோம். ஆகவே இந்த வகையிலும் நாம் நாஸ்திகர்கள் என்பதை ஆண்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும்?

(5) கோயிலிலிருக்கும் சாமிக்குப் பெண்மக்கள் தான் பணிவிடை செய்யவேண்டும், அதற்காகவே தேவதாசிகள் என்பவர்கள் படைக்கப்பட்டார்கள். ஆகையால் அவர்களை இளம்வயதிலேயே கோயிலுக்கென்று பொட்டுக்கட்டி விட்டு விடவேண்டும். அவர்கள் சாமியின் பேரால் கோயில் பூசாரிகளுக்கும், காரியஸ்தர்களுக்கும், மைனர்களுக்கும் வழிபக்காரிகளாக இருக்க வேண்டும் என்று ஆஸ்திகர் கூறுகின்றனர். ஆனால் நாமோ சாமியின் பேரால்—மதத்தின் பேரால் விபசாரம் நடைபெறக்கூடாது. அது நமது நாட்டிற்கே மிகவும் வெட்கந் தரத்தக்க செயலாகும், அந்நியர் நகைக்கத்தக்க செயலாகும், அதிலும் கடவுளின் பெயரால் விபசாரத்திற்கென்றே ஒரு சாதியை ஒதுக்கி வைத்தல் அடாத செயல். அச்சாதிக்கே மிகவும் இழிவைத்தருவதாகும். ஆகையால் கடவுளின் பெயரால் விபசாரம் நடைபெறும் வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமெனக் கூறுகின்றோம். இந்த வகையிற் பார்க்கும் போது நாம் நாஸ்திகர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

(6) தற்காலத்தில் விளங்கும் கோவில்களெல்லாம், நம் முன்னோர்களால் கட்டப்பட்டன. அவைகளை ஆழ்வார்கள் பாடியிருக்கின்றார்கள், நாயன்மார்கள் பாடியிருக்கின்றார்கள். அக்கோயில்களெல்லாம் தெய்வத்தன்மை பொருந்தியன. கோயில்களில் கடவுள் வீற்றிருக்கின்றார். தெய்வத்தன்மை யென்பது கொழுந்து விட்டுச் சுடருகின்றது. ஆகையால் அவைகளுக்குச் சென்று வணங்கவேண்டும் என்று ஆஸ்திகர்கள் கூறுகின்றார்கள். நாமோ, பாப்பான் போனால் தான் சாமியிருக்கும், அவன் பூசை பண்ணினால் தான் சாமியிருக்கும், மற்றவன் சாமியைத் தொட்டால் அது செத்துப்போய்விடும். சில வகுப்பினர் கோயிலுக்குள் சென்றவுடனேயே அங்குள்ள சாமி செத்து மடிந்து சாம்பலாகிவிடும் என்று சொல்லப்படுகிற கோயில்களில் சாமி எப்படியிருக்க முடியும்? அந்தக் கோயில்களில் விபசாரமும் சகலமும சதியாலோசனையும், எலியும், பூனையும், பாம்பும், கிரியும், பல்லியும், தேளும், வௌவாலும் அதன் மல ஜலங்களும், விஷக் காற்றும் விஷக் கிருமிகளுமே குடி கொண்டிருக்கின்றன. ஆகையால் சுயமரியாதைக்குக் குறைவு வாராமல் தேசப் பொதுச் சொத்துக்களாகிய கோயில்களும், சாமி யிருக்கிறதோ இல்லையோ எல்லோருக்கும் பொதுவாகவே யிருக்கவேண்டும் என்றே கூறுகின்றோம். ஆகவே இந்த வகையிலும் நாம் நாஸ்திகர்கள்தான் என்பதை தைரியத்துடன் ஒப்புக்கொள்ளப் பின் வாங்குதல் கூடாது. (தொடரும்)

## டில்லி சட்டசபை தேர்தல்

அன்புள்ள ஐயா!

டில்லிச்சட்டசபை (லெஜிஸ்லேட்டில் அசெம்பிளி)க்குச் சென்னை இராஜதானி வர்த்தகத் தொகுதியால் அடுத்த எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய மெம்பர் ஸ்தானத்துக்கு நான் அபேக்ஷகனாய் நிற்க உத்தேசித்திருப்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நம் தென்னிந்தியாவின் ஒரு பிரபல வர்த்தகக் குடும்பத்தைச் சேர்ந்தவனென்பது தங்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். சென்ற முப்பது வருஷங்களுக் கதிகமாக நான் வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரங்கள் விரிவாகச் செய்து வருகிறேன். நம் தேசத்தின் வியாபாரம், கைத்தொழில், விவசாயம், பொருளாதாரம் முதலியவைகள் சம்பந்தமான விஷயங்களையும் நிகழ்ச்சிகளையும் நீண்ட காலமாக ஊன்றிக்கவனித்து அநுபவ பூர்வமாய் ஆராய்ந்து அத்துறைகளில் வேலையும் செய்து வந்திருக்கிறேன். வெகுகாலமாகத் தென்னிந்திய வியாபாரச்சங்கத்தின் (சதரன் இண்டியா சேம்பர் ஆப் காமர்ஸின்) நிர்வாகக் கமிட்டி அங்கத்தினனாக இருந்து வருகிறேன், முன் ஒரு சமயம் மேற்கூறிய சேம்பரின் அக்கிராசனாதிபதியாக (பிரசிடெண்டாக) இருந்திருந்ததுடன் இவ்வருஷமும் அப்பதவிக்கு ஏகோபித்துத்தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். தென்னிந்தியத்தோல் வியாபாரிகள் சங்கத்தின் பிரசிடெண்டாகவும் பல வருஷங்கள் இருந்துவருகிறேன், தவிர, ஆரம்ப முதலே அகில இந்திய வியாபாரச் சங்கங்கள் மகாநாட்டின் (பெடரேஷனின்) நிர்வாகக் கமிட்டி அங்கத்தினனாகவும் இருக்கிறேன். நம் தேசத்தின் பல பாகங்களிலும் இங்கிலாந்து உள்பட ஐரோப்பாவின் பல தேசங்களிலும் பிரயாணஞ் செய்து அங்குள்ள விஷயங்களையும் கவனித்தறிந்துள்ளேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பெற்றால் எனது நீண்ட வியாபார அநுபவத்தைக்கொண்டும் நம் இராஜதானியுடையவும் தேசத்தினுடையவும் நலத்தைப்பற்றிய அநுபவ அறிவைக்கொண்டும் அசெம்பளியில் நம் தேசவர்த்தகமுன்னேற்றத்திற்காக என்னாலானவரை முயற்சித்துழைக்கச்சித்தமாயிருக்கிறேன்.

ஆகையால் மேற்சொன்ன ஸ்தானத்திற்கு நான் தகுதியுள்ளவனென்று தாங்கள் கருதினால் தேர்தல் சமயத்தில் தங்கள் வோட்டை எனக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தங்கள் உண்மையுள்ள

M. ஜமால்முகமத் சாஹிபு

## அநுதாபம்.

பூவாளூர் சுயமரியாதைச் சங்க நிருவாக அங்கத்தினரும் பொது நல சேவையில் பொறுமையுடன் ஆடம்பரமற்ற வகையில் தொண்டு ஆற்றி வருபவரும் பிரபல பிரசுதாரருமாகிய உயர் திரு பா. வெங்கடாசலம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் சென்ற 3-4-29 புதன்கிழமையன்று எதிர்பாராதவாறு சில்நாள் நோய் வாய்ப்பட்ட காரணத்தால் உயிர் துறந்தார் என்ற செய்திகேட்டு திடுக்கிட்டு கலங்கியதுடன், திருமணமாகிய சில திங்கட்குள் இளம் வயதில் உலக வாழ்க்கையே இன்னதென்றறியாத மங்கையர்க்கரசியைப் பிரிந்து துன்புறும் திரு. பா. வெங்கடாசலம் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அ. பொன்னம்பலனார்.


Souriya

சகோதரிகளே!

எனக்கு 39 வருடங்கள் வரையில் புத்ரபாக்கியமில்லாமல் சதா அவஸ்தைப்பட்டு வந்த சூதக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்ர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

சங்கராம்பாள்.

"சௌரியா"

ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான

'சௌரியாவை'

சாப்பிட்டு ருது சூலை, சூதக வலி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதியினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சம்பன்னராய் வாழ்கின்றனர்.

விபரமான கேட்லாக் இனாம்.

புட்டி 1 க்கு ரூபாய் 3—0—0.

பாக்கிங் தபால் செலவு வேறு,

சங்கர ராம் மெடிகல் ஹால்,

சேலம்.

(15)

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

போகிக்கவும் பிள்ளைபெறவும் மட்டும் உள்ள கருவிகளெனவும் இராமன் உண்மையாகவே நம்பியவனாதல்வேண்டும். ஆரிய மக்களிற் சிறந்தவனெனக் கருதப்படும் இராமனே இவ்வாறு கருதியிருப்பனேல் பிற ஆரிய மக்களுடைய கொள்கையைக் கூறவும் வேண்டுமோ? தமிழ் மக்களோ பெண்களுக்குச் சம உரிமை கொடுத்து நம்பிக்கை மிகக்கொண்டு நல்ல முறையிலே அவர்களை நடத்தி வந்தவராவர். தமிழ்ப் புலவர் திருவள்ளுவரும்,

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" என்றருளினர்.

பெண்களை அடைத்து வைத்துச் சிறைக்காவலைப்போலக் காத்துவருவது மடமையே யென்றும் அவர்களுடைய நிறை அவர்களைக் காப்பதே சிறந்ததெனவும் தமிழ் மக்கள் உணர்ந்து ஒழுகியபோறிஞர். பெண்களுக்கு அவரவர்களுடைய மூந்தானையே காவல் என்று பழமொழியும் தமிழ் நாட்டில் வழங்கிவருகிறது. பல பெண்களை மணந்துகொண்டு அவர்களெல்லோரையும் காப்பதென்பது முடியாத காரியமே. ஒரு ஆண் மகன் பல பெண்களைக் கூடத் துணிவனேல் ஒரு பெண் மகள் பல ஆண்களைக் கூடத் துணியாமவிருப்பளோ? ஒருவன் ஒருத்தியையே காதலித்துப் பிற பெண்களைத் தாய்மார்களாகவும் உடன்பிறப்பாகவும் கருதுவனேல், அவளும் பிற ஆடவரைத் தந்தையாராகவும் உடன் பிறப்பாகவும் கருதி நடப்பாள். ஆண் மகன் பிழைபட நடந்துகொண்டு பெண்மகளை மட்டும் அவன் விருப்பத்துக்கு மாறாகக் கட்டுப்படுத்த முனைவதிலும் மடமை வேறுளதோ? ஆண் மக்கள் பெண் மக்கள் சொல்லை நம்பாதிருப்பரேல் பெண் மக்கள் ஆடவர் சொல்லையும் நம்பார். நம்பிக்கையில்லாத இடத்து ஒற்றுமையோடு கூடிய இன்ப வாழ்வு எங்கிருந்து வரும். கலகமும் துன்பமுமே மிகுவனவாம். இத்தகைய தீய எண்ணங்களெல்லாம் தமிழ் மக்களிடை ஆரியர் கூட்டுறவாலேயே படிப்படியாக நுழைவனவாயின. இத்தீய எண்ணங்கள் ஒழிந்து ஒருவன் ஒருத்தியையும் ஒருத்தி அவ்வொருவனையுமே நம்பி வேறுபாடில்லாமல் வாழத்தொடங்கும்போது தான் உண்மை இன்பவாழ்வு தோன்றுவதாகும். அறிஞர் அத்தகைய இன்பவாழ்வை நம்நாடு அடைந்துவாழ வேண்டுமொரு முயன்று நலம்புரிய முன்வருவார்களாக.

இராமன் தசரதனுக்குத் தர்ப்பணம் செய்தபோது புரோகிதராகிய வசிட்டருதவியில்லாமலே தானே தண்ணீரைக் கோரிவிட்டுப் பிண்டமும் போடுகிறதாகத் தெரியவருகிறது. ஆரியருள் பின்னரே புரோகிதர் இன்றியமையாதவராயினர் போலும்!

சாபாலி முனிவன் கூறுவதை உற்று நோக்கினால் நாம் நிதி கொடுத்தலைப்பற்றிப் போனகட்டுரையில் ஆராய்ந்த உண்மைகள் பல புலனாகின்றன. அறிஞர் சிந்தித்துத் தெளியுமாறு மறுமுறையும் சாபாலி முனிவன் கூற்றைப்படிக்கவேண்டுகின்றோம். ஆதலின் அக்காலத்திலும் புரோகிதர்களுடைய புரளியை உணர்ந்த அறிஞர் இருந்தனரெனவும், அப்புரளிகளை விளங்க எடுத்து அவர்கள் கூறிவந்தனரெனவும் தெரியவருகிறது. புரோகிதராகிய வசிட்ட முனிவர் இதைக் கூறி இராமன் சாபாலியைக் கண்டித்தனனெனவும் கூறுகிறார். இராமன் கண்டித்ததில் வெறும் பேச்சே உளதன்றி அறிஞர்ஒப்புக்கொள்ளத் தகுந்த காரணம் அதில் ஒன்றுமே காணவில்லை, "சாபாலி தான் கூறியது பிழையென மன்னிப்புக் கேட்டதாக வால்மீகி கூறுவனவெல்லாம் மக்களை அறிவைக்கலைத்துப் புரோகித வசமாக்கும் படிற்றுரைகளே யாம். இனிக்கம்பருடைய புரளியைக்காண்பாம்.

இராமன் ஏவலால் இலக்குவன் மரத்தின்மேலேறிப் பரதன் வருகையை யுரைத்ததாக வால்மீகி கூறக் கம்பரோ அவன் தானாகவே ஒலிகேட்டு மலைமேல் எறிப்பார்த்து உண்மையுணர்ந்து குதித்தோடி வந்து இராமனிடம் கூறுகின்றனன் என்பர் கம்பர். பரதனைக்கண்டவுடன் இராமன் கூறிய வெறுக்கத்தகுந்த வாலாறுகளையெல்லாம், கம்பர் மறைத்தார். மேலும் சுமந்திரனோடு இராமன் ஆற்றுக்குப்போய் நீர்க்கடன் கழித்தனனெனவும் இராமனுடைய தாய்மார்களைப் பின்னர் வசிட்டன் அழைத்து வந்தனனெனவும் வால்மீகிகூற அதற்குமாறாக வசிட்டன் இராமனைத் தேற்றி அழைத்துச்சென்று தசரதனுக்குச்செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்வித்தான் புரோகிதனாக இருந்து எனவும் சுமந்திரன் இராமனுடைய தாய்மார்களை அழைத்து வந்தனனெனவும் கம்பர் நேர்மாறாகக் கூறுகிறார். இதனால் இவர் புரோகிதத்தை நிலை நாட்டவே இவ்வாறு கதையை மாற்றியவராவர். என்னே இவர் தம் இழிமதி இருந்தவாறு!

தசரதன் செய்த வாக்குறுதியைக் கூறிய இராமனுக்கு பின்னரே தனக்குரிய நாட்டை இராமனுக்குத் தந்ததாகப் பரதன் கூறினனெனக் கம்பர் கதையைக்கூறி இராமனுடைய சூழ்ச்சிகளையெல்லாம் மறைத்து அவனை மிகவும் நல்லவனைப்போலக் காட்டுகிறார். மேலும் பரதன் இராமனை அழைத்துப் போக வாயிலில் படுத்து அவன் குடிகளை இராமனையழைக்குமாறு ஏவியதையும் குடிகள் மறுத்ததையும் கம்பர் மறைத்துவிட்டனர்.

தசரதனுடைய மனைவியரனைவரும் வந்ததாகவும் அவர்களெல்லோரையும்இராமன்வணங்கினனெனவும்வால்மீகிகூறுகிறார். கம்பரோஉடன்கட்டையேறலாகிய தீய வழக்கத்தின்படி தசரதனுடைய மனைவியரனைவரையும் தீயிலிட்டுக்கொளுத்தியதற்கேற்ப கோசலை சுமத்திரை கைகேசி ஆகிய மூவரும் வந்தனர் என்று கூறுகின்றார்.

பரத்துவாச முனிவன் இராமனைப் பார்க்க வரவில்லையெனவும் பரதன் அயோத்திக்குப்போகும் வழியில் நடந்த வரலாற்றை அம்முனிவனைக்கண்டு கூறினனெனவும் கூறுகிறார் வால்மீகி. கம்பரோ அம்முனிவன் இராமனைக்காண உடன் வந்து திரும்பினன் என்பர். சாபாலி முனிவன் பேசிய முதலிய வரலாறுகளெல்லாம் கம்பர் மறைத்துவிட்டனர். மேலும் பரதன் அயோத்திக்குப் போய் தசரதனுடைய அரண்மனை புகுந்து அங்கே தனது தாய்மார்களை விட்டு விட்டு நந்திக்கிராமம் போயினன் என வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவன் அயோத்தி நகரத்திலேயே புக்கிலன் நந்திக்கிராமம் போயினனென்பர்.

## காயாமொழியில் சுயமரியாதை உதயம்.

தென் திருநெல்வேலியைச் சார்ந்த காயாமொழி என்ற கிராமத்தில் 31-3-29-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருவாளர் சு. அரிடாசனம் அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் எஸ். ஈசன், ஆதித்தன், எ. பி. ஆதித்தன், பி. ஆர். ஆதித்தன் ஆகிய நால்வரும் "சுயமரியாதைப்போர்" "பார்ப்பனர்களின் சூழ்ச்சி" தமிழர்களின் பழமையும் தற்கால நிலைமையும்" "திருச்செந்தூர் கேவிலும் கம்மனோர் அறியாமையும்" என்னும் பொருள்கள் பற்றி முறையே விரிவாகவும் விளக்கமாகவும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்ததென்று பி. ஆர். ஆதித்தன் எழுதுகிறார்.

## தென்மாபட்டுவேளாளர்களுக்கோர் அறிவுறுத்தல்

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூரை அடுத்து தென்மாபட்டு என்றொரு கிராமம் இருக்கிறது. இவ்வூரில் வசிக்கும் பெரும்பான்மையோர் வேளாளர் என்பவர்கள். இவர்களுக்குச் சொந்தமாகத் தனித்ததோர் மடமுண்டு. அம்மடத்தில் எங்கேயோ திரிந்த ஓர் மடப்புளிப் பெருச்சாளி வந்து குடியிருந்துக்கொண்டு ஜனங்கட்கு மிக இம்சைவிளைவித்துக்கொண்டிருக்கிறது. அதைப் பற்றி மற்றுமோர் சமயம் பேசிக்கொள்ளுவோம். அம்மடத்தில் கூடுவோர்களெல்லாம் ஆசார அநுட்டானங்களில் சிறிதும் வழுவாத சைவர்களாம். சர்வகாலமும் தியானம் செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக பிறரைத்தூற்றிக்கொண்டிருப்பதே தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள். இவ்வூரில் அறிவைப்புகட்டும் கல்விச்சாலை இல்லையாதலால் இவர்களுடைய அறிவு விசாலமடைவதற்கு ஏதுவின்றிப் போய்விட்டது. இவர்களின் பெற்றோர்கள் இவர்கட்கு குட்டைப் புராணம் சீட்டாட்டம் சொக்கட்டான் முதலிய கேடுகெட்ட வித்தையைத்தான் கற்பித்து கொடுத்தார்கள் போலும். அந்தோபாவம்! இவர்களுடைய புத்தியை என்னென்று கூறுவது? சுயமரியாதைத்தொண்டர்கள் இவ்வூரில் வாசகசாலை ஒன்று ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வாசகசாலை ஏற்பட்டதின் காரணமாய்ப்பல மக்கள் நல்வழியில் திருந்துவதைக்கண்ட சில அழுக்கு மூட்டைகள் சுயமரியாதையின் ஆக்கத்திற்கு அழிவு தேடப்புறப்பட்டது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. 'அ' வுந்து அடுத்தஎழுத்தை அறியாதவர்கள் சுயமரியாதையை எதிர்த்துப்போராடுவதென்பது கேலிக்கூத்தல்லவா? என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

தங்க மெடல்கள் பெற்ற

**மலையாள நாட்டுத் துணிகள்.**

இரணியல் சேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
Travancore.

காப்பிக் குடியை ஒழிக்கும்

**ரேப்பிப்பொடி**

அபிமானிகளே!

காப்பிவிதை சேராமல் மூலிகைகளால் செய்தது. பக்குவம் காப்பியைப்போன்றது. உட்கொண்டால் காப்பிமணம்மணக்கும். உட்சூடு, மலக்கட்டு, பித்தம், வெட்டை, நீர்க்கடுப்பு, இவைகளை நீக்கி காம்புகளுக்கு பெலத்தைக் கொடுக்கும். வி. பி. வேறு

$\frac{1}{4}$ டஜன் டின் ரூ. 1 $\frac{1}{2}$ டஜன் ரூ. $1\frac{3}{4}$.

*Rape factory* S. V. ராஜப்பா, பழநி.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

அனுபவிப்பதற்கு கடவுள் என் குறுக்கே நிற்க வேண்டுமென்றும், சீரங்கம் கடவுளுக்கு நெய்யிலேயே தீவட்டி முதற்கொண்டு போட நாற்பதினாயிர ரூபாய் போதாமல் பிரைஸ் சீட்டு இரண்டு லட்ச ரூபாய்க்கும் போட்டு பஞ்ச காலத்தில் வயிறு நிறைந்தவர்களுக்கே வடைபாயசம் வடிக்க கடவுள் வந்து நிற்பது எந்த ஞாயத்தைப் பொறுத்ததென்றும், வெள்ளியங்கிரியிலிருந்து வந்த நடராஜக்கடவுளோடு வந்த மூவாயிரம் தீட்சதர்களுக்கும் தென் தேச சிவக்கடவுள் எப்படி அடிமையாயிற்று என்றும், பஞ்சத்தால் வயிறெரிட்டி நெஞ்சுவற்றிப் போன தாய்மார்கள் தம் குழந்தையின் பசிக்குப்பால் கொடுக்க தம்மிடமும் பாலில்லாமல் மாட்டுப்பால் வாங்கிக்கொடுக்க வகையுமில்லாமல் வருந்தியிருக்கையில் அவ்வேழைகளின் உழைப்பால் வந்த பணத்தைக்கொண்டு நடராஜ பிரபுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் குடம் குடமாக பால் அபிஷேகம் செய்யவும் அந்தப்பாலை வடகரை தென்கரை தீட்சதர்கள் ஒவ்வொரு பாகத்திலும் கரையாளர்களாகவும் கட்டளைக்காரர்களாகவும் இருந்துகொண்டு குடம் குடமாகப்பிடித்துபால்பாயாசமும்பாலடையும்டால்கோவாவும் அக்கார அடிசிலும் செய்து தங்கள் பிள்ளை குட்டிகள் எல்லாம் தின்று உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுத்து கோவில் தாசிக்குக் கொடுத்தது போக ஊர் தாசி வீட்டுக்கும் போய் அவர்கள் நாயகர்களும் உண்ட மீதம் சலதாரைக்குள் தள்ளப்பட்டால் தான் புண்ணிய உலகம் கொடுப்பேன் என்று சொன்ன கடவுள் யார் என்றும் சன சமூகங்களுக்கு வேண்டிய லௌகிக காரியங்களை தீர்ப்பார் கடவுள் அதற்காக மடாதிபதிகளுக்கும் மகந்துவிற்கும் பணம் கொடுக்கவேண்டும், அவர்கள் நமக்காகக்கடவுளிடம் சொல்லுவார்கள் அவர்களும் ஆசீர்வதிப்பார்கள், ஆனால் இவர்களுக்கு ஏதாவது வந்து விட்டால் கடவுளை விட்டு விட்டு வெள்ளைக்காரமருந்துக்கடைக்குள் மடத்தை அமைத்துக்கொள்ளுவார்கள். சங்கராச்சாரிக்குச் சிறிது நாளைககு முன் புத்திமாருட்டம் வந்தது. இப்பொழுது ஸ்ரீ மகுந்துவிற்கும் புத்திமாருட்டம் வந்திருக்கிறது, இவர்கள் வெள்ளைக்கார டாக்டர்களிடம் போகையில் கடவுளை எங்கே விட்டு விட்டுப் போனார்கள் என்றும் இதுபோன்ற இன்னும் நியாயத்திற்கிசையாத அனேக விஷயங்களையும் சுயமரியாதைக்காரர்கள் கேட்டதுண்டு.

சாஸ்திரிகள், கனபாடிகள், சடாவல்லவர்கள், ஆச்சாரியர்கள், பாகவதர்கள், மடாதிபதிகள் இன்னும் பலபார்ப்பார்களிருக்கிறார்களே இவர்களில் ஒருவராவது அல்லது சாதாரண பார்ப்பானாவது ஆஸ்திக சங்கத்தில் இல்லையே. வருணாசிரம சங்கத்தில் எல்லாவிதப் பார்ப்பாருமிருக்கிறார்களே, அது ஏன்?

சந்திரன் — என்னுயிரின் உள்ளமே! மகாபண்டிதர்கள்கூட சுயமரியாதைக்காரர் சொல்லுவது போலவே சொல்லியுமிருக்கிறார்கள்; இப்பொழுதும் சொல்லுகிறார்கள். கல்கத்தா இந்து சமாஜ் சம்மேளனத்தில் கௌரங்க தேவார் பிறந்த தினக் கொண்டாட்டத்தைக் கொண்டாடின கூட்டத்தில் தலைமை வகித்த பிரமாத நாததர்க்க பூஷணம் அவர்களால் செய்த பிரசங்கம் ஏப்ரல் மாதம் மார்டன் ரெவினியூ பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பதைப் படித்துப் பார்த்தார்களானால் சுயமரியாதைச் சங்கத்தை எந்த புத்திமானும் குற்றம்சொல்லமாட்டான். நமக்கு விரோதி அன்னியர் அல்ல. நமது மூட வழக்கமும் மடத்தனமான நம்பிக்கையும், உயர்வு தாழ்வென்னும் ஜாதி இறுமாப்பும், தீண்டாமை என்னும் அக்கிரமமான கொடுமையும் போனாலொழிய ஒத்துழையாமையாலும், வரி கொடாமையாலும், அன்னிய துணி பகிஷ்காரம், அந்நிய துணிக்கு தீயிடல்முதலியஎந்த வித ராஜதந்திரங்களாலும் சுயராஜ்யம் வராது, நமது நாடும் சுகப்படாது என்று சொல்லியிருப்பதை நானும் படித்தேன். தர்க்க பூஷண பண்டிதர்கள் எதைச் சொல்லுகிறார்களோ அதையே அறிவுடைய சுயமரியாதைச் சங்கமும் சொல்லுகிறது.

SEX & HEALTH BOOKS.
BIRTH CONTROL BOOKS.

| Very Important! | Rs. A. |
| --- | --- |
| Married Love (By Dr. Marie stopes London publication) | 1—8 |
| Secret of sexual Bliss | 1—0 |
| Hidden powers in Man | 2—8 |
| Sexual Secrets | 1—4 |
| Sex Vice and How to avoid it | 1—0 |
| A manual of Birth control | 1—0 |
| Queries of Sex | 0–12 |
| Secret Exercise of Enjoyment | 0—8 |
| The Hidden side of sexual Science | 0–12 |

Catalogue free.
K. S. SREENIVASAN & Co.,
(2-b) 83, Broadway Madras.

காலஞ்சென்றார்.

நாவலூற்றுச் சமரச சன்மார்க்க சங்கத்தின் நிலைய குரு, சி. சுவாமி சிவநேசம் அவர்களின் தந்தையார் சி புதூர் மணியம், முத்துசாமிக்கவுண்டரவர்கள் 70 வயதில் அவர் தம் இல்லத்தில் 2—4—29 ௳ காலை 4 மணிக்குக் காலஞ்சென்று விட்டனர் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

மதனகாமேஸ்வர லேகியம்.

துரித சொற்பன வெளியீடுதலை நிவர்த்தித்து நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி குறைந்துபோன இந்திரியத்தைவிருத்தியாக்கி தளர்ந்துபோனநரம்புகளுக்கு முறுக்கேற்றிஜனனேந்திரியக்கருவிகளைப்பலப்படுத்துவதில் நிகரற்றது. சேர் 1 க்கு விலை ரூபாய் 3. வி. பி. வேறு.

பஞ்ச தீபாக்கினி லேகியம்.

அஜீரணம், அக்னி மந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப்பொருமல், குன்மம், வாயு முதலிய இரப்பை சம்பந்தமான சகலரோகங்களையும் நிவர்த்திக்கும் சேர் 1 க்கு விலை ரூபா 1-8-0 வி. பி. வேறு. அன்னிய நாட்டார்முன்பணம்அனுப்பவேண்டும்.

சித்த வைத்தியசாலை,
ஆநந்த நிலையம், திருச்செங்கோடு. S. I.

இனாம்! சுவிஸ் வைரம் இனாம்!!
SWISS BRILLIANTS.

ஜெர்மன் வைரம் என்றும் அமெரிக்கன் நீவ்டயமன் என்றும் கூறப்படும் வைரங்களைவிட சுவிஸ் வைரம் சிரேஷ்டமானதென்று நிபுணர்களால் ரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. சுவிஸ் வைரமானது ஒரு சம்மட்டியின் பலமான அடியாலும் உடைக்க முடியாதபடி அவ்வளவு கெட்டியானது. அது மிகவும் கெட்டியாக விருப்பதால் அதனுடைய ஜ்வலிப்பும், பிரகாசமும், மிகநேர்த்தியான மெருகும் 100-வருடங்கள் ஆனாலும் கூட மறைந்து போகாது. சுவிஸ் வைரமானது எவ்வளவு நேரம் நெருப்பில் போடப்படினும் வருடக்கணக்காக எண்ணையில் போட்டு வைத்தாலும் அதன் நிறம் மாறாது. அரத்துக்கு தேய்வு போகாது.

எங்களிடம் எல்லா சயிஸ் (அளவு) கல்களும் இருக்கிறது. காரட் விலை 2½ வெள்ளி முதல் 5 வெள்ளி வரையில் ஒரு (1) சயிஸ் முதல் 50 சயிஸ் வரையில் வரி வடிவம் (படம்) எழுதப்பட்டதும் இன்னும் பல மாதிரி மாணிக்க கல்வெட்டுகளும் அளவும் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் இனாம்.

ஒரு சாம்பிள் சுவிஸ் வைரம் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம். இந்தியா, பர்மா, சிலோன் பகுதிகளிலிருந்து அனுப்பும் கடிதங்களுக்கு 2 அணா அல்லது 9 சதம் ஸ்டாம்பும் போஸ்டு கார்டாயிருந்தால் 1 அணா அல்லது 6 சதம் ஸ்டாம்பும் ஒட்டவேண்டும்.

எங்ளோ சுவிஸ் மாணிக்க கம்பெனி,
தபால் பெட்டி நெ. 360, பினாங்கு.
The Anglo Swiss Gem Company,
P. O. Box 360, PENANG.
(11)

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை,
ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள்.




இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடுமிகவும் உசதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜீலைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.
(4-h)

ரூ. 2—14—0 ரூ. 2—14—0

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ, 2-14-0.

கனடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

(4-d)

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46 பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் லபன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட.

உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

(4-g)

(2-a)

## இவைகளில் எது வேண்டும்?

| | |
|---|---|
| கொக்கோகம் | 1—0—0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2—4—0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | 2—0—0 |
| இரதி சாஸ்திரம் | 1—0—0 |
| சரீரமர்ம சாஸ்திரம் | 1—0—0 |
| முத்தத்தின் மர்மம் | 1—8—0 |
| இஸ்லாம் | 1—0—0 |
| கைத்தொழில் முறைகள் | 1—8—0 |
| குடும்ப விநோதக் கதைகள் | 2—0—0 |
| ஸ்திரீ புருஷ ரகஸ்யம் | 1—0—0 |
| மனோவசிய இரகசிய சாஸ்திரம் | 1—4—0 |

மற்ற எல்லாவித தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

கேஸ்ரி புஸ்தகசாலை,
7/99 பவழக்காரதெரு ஜி. டி. மதராஸ்.

## ஜாதிக்கு ஒரு நீதி கூறுவதில் மநு (அ)நீதி மிகச்சிறந்தது.

## பல மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லையா?

பழநி சி. எம். சாமி

# குருதாம்பிர பஸ்பம் சாப்பிடுங்கள்.

**தீராதென கைவிடப்பட்ட சகல வியாதிகளையும், தீர்க்கும் வல்லமையுடையது சி. எம். சாமி ஔஷதங்கள் தான் என்பதை மறவாதீர்கள்! உங்கள் கவலை ஒழியவேண்டுமானால் ஒருமுறை எங்கள் மருந்துகளை உபயோகியுங்கள்.**

ஏராளமான நற்சாட்சிகளும் தங்க மெடல்களும் பெற்று ஏழுதலைமுறையாக அனுபவசித்தியடைந்தது, ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கி புகழ் பெற்று வருவது எங்கள் தாம்பர பஸ்பம் ஒன்றே.



இது கிமி, குஷ்டம், மதமதப்பு, ரணம், பத்து, தடிப்பு, குழிப்புண், ஆனைக்கால், பவுத்திரம், பெருவயறு, மகோதரம், கண்டமாலை, கனைப்பத்து, காசம், கிரந்தி, ஈளை, இருமல், இளைப்பு, குன்மம், குறைநோய், முதலிய கொடிய வியாதிகளையும், தீராதென கைவிடப்பட்ட இராநோய்களையும் அவசியம் குணமாக்கும். 50 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ 25. ஏழைகளுக்குப்பாதி விலை. வி. பி. சார்ஜ வேறு.

பினாங்கு முதலிய அன்னிய தேச வாசிகள் ரூ 5 அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

நற்சாட்சிகள்.

எனக்கு வயது 35, இரண்டு வருஷமாய் குஷ்ட வியாதி, வலதுகால் பெருவிரலில் குழிப்புண், குண்டி பின்புறத்தில் கருமேசம், முதுகில் வெள்ளைப்புண்கள், வலது கைகளிலும் இடது கைகளிலும் பத்துக்கள், சிரேகத்தில் மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டு மதராஸ் ராயபுரம் ஆஸ்பத்திரியில் 17 வாரம் வரை ஏற்றியும் இன்னும் அநேக மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும் பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பரபஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாயிருக்கிறது.

2 என் தாயாருக்கு இருந்த குலை, குஷடம், மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல், முழங்கால் பாதம் கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு தங்கள் தாம்பரபஸ்பம் சாப்பிட்டதில் சௌக்கியமாய்விட்டது. இப்போது எல்லா வேலைகளும் செய்துகொண்டு சௌக்கியாய் இருக்கிறாள், ராமமூர்த்தி திண்டுக்கல் 10—10—28,

இன்னும் ஏராளமான நற்சாட்சிகளைக்கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர் **சி. மலையப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை, பழனி (தென்இந்தியா)

(12-a)

## "பாரதி"

இஃது

தேசாபிமானம் பாஷாபிமானம் அரசியல் ஜன நிர்மாணம் ஆசார சீர்திருத்தம் சமூகத தொண்டு விவசாயம் கைத்தொழில் வியாபாரம் பொருளாதாரம் ஜீவியசரித்திரம் தேசசரித்திரம் கிராம நிர்மாணம் தீண்டாமை விலக்கு மதுவிலக்கு மாதர் விடுதலை கதர் இயக்கம் வாலிபர் இயக்கம் மாதர் இயக்கம் சாரணர் இயக்கம் புஸ்தகாலய இயக்கம் ஐக்கிய இயக்கியம் தொழிலாளர் இயக்கம் சன்மார்க்க இயக்கம் அயல்நாடுகளில் நம்மவர் பொதுஜனக்கல்வி கலைவளர்ச்சி குழந்தைவளர்ப்பு தேகப்பயிற்சி சுகாதாரம் பத்திரிகைத்தொழில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு ஆகிய விஷயங்களுடன் வெளிவரப்போகும் ஓர் உயர்தர தமிழ்மாதப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! இத்தனைச் சிறப்புடன் உதயமாகும் "பாரதி"யை அதிகமாயும் அன்புடனும் ஆதரிக்க வேண்டியது தமிழ்ச்சகோதர சகோதரிகளின் தனிக்கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விரும்பினால், "பாரதி"யில் விளம்பரம் செய்யுங்கள்.

இதன் ஆசிரியர், தேவாரம் ரா. நாராயணசாமி

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0.
வெளிநாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-8-0.
அல்லது 4 ஷில்லிங்

விலாசம்:—மானேஜர்,
"பாரதி" உத்தம பாளையம்,
மதுரை ஜில்லா.

(8)



## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3311.
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசகுழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காசரப்பு எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி திடனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன்பணம் ரூ, 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், மு. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பேனாவுடன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பேனாவுடன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினைன் வாட்சு கம்பேனி,
(4-f) பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 வருஷ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்



## திருப்பூர் கதர் & பனியன்ஸ்.

உங்களுக்கு எதுவேண்டும்!
கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!
எது வேண்டுமானாலும்
திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரியில்
தயார் செய்யப்படுகிறது.
விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | | வெளி நாடு | |
|---|---|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு | 5— 8—0. | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு | 6—8—0. |
| ,, அரை டஜன் | 2—14—0. | ,, 2 டஜன்கள் | 12—0—0. |
| ,, கால் டஜன் | 1— 8—0. | ,, 3 டஜன்கள் | 17—8—0. |

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும். வெளிநாடு ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபர ஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

கதர். கருப்பண்ணன்,
**Khaddar. Karuppanan,**
(7) Sole Agent, TIRUPUR. (S. India)



## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.